# சிலாங்கூர்

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

இன்று இலவசம்

SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2051 / பிலவ ஆண்டு புரட்டாசி மாதம் / செப்டம்பர் 9/2021 SEPTEMBER 9/2021


# சிலாங்கூர் ஆலயங்களுக்கு மானியம்



ஷா ஆலம் - சிலாங்கூரிலுள்ள 160 ஆலயங்களுக்கு 17 லட்சம் வெள்ளியை மாநில அரசு மானியமாக வழங்கியுள்ளது. முஸ்லீம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்காக இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட மானியத்தின் கீழ் அந்நிதி வழங்கப்படுகிறது. இந்த மானியத் தொகை இவ்வாண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி கட்டங் கட்டமாக வழங்கப்படுவதாக சிலாங்கூர் மாநில பௌத்தம், கிறிஸ்துவ, இந்து, சீக்கிய மற்றும் தோ சமயங்களுக்கான சிறப்பு செயல்குழுவின் (லீமாஸ்) இணைத் தலைவர் வீ. கணபதி ராவ் கூறினார். முதல் கட்டமாக 63 ஆலயங்களுக்கு 630,000 வெள்ளி வழங்கப்பட்ட வேளையில் இரண்டாம் கட்டமாக 43 ஆலயங்களுக்கு 393,000 வெள்ளி வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். இத்திட்டத்தின் இறுதிக் கட்ட நிதியளிப்பு நிகழ்வு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் 54 ஆலயங்களுக்கு 700,000 வெள்ளி மானியமாக வழங்கப்படும் என்று இங்குள்ள மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் கூறினார். இந்த மானியத்தின் வழி தங்கள் வட்டாரத்தில் சமய மற்றும் சமூக நடவடிக்கைகளை குறிப்பாக கோவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித் திட்டங்களை ஆலயங்களால் மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார். அனைத்து சமயத்தினருக்கு மாநில அரசு ஆண்டுதோறும் மானியங்களை வழங்கி வருகிறது. ஆகவே, முஸ்லீம் அல்லாதோரிடம் மாநில அரசு பரிவு காட்டவில்லை என குற்றஞ்சாட்டுவதற்கு எந்த காரணமும் இல்லை என்றார் அவர். கடந்த 2014 ஆம் ஆண்டு தொடங்கி முஸ்லீம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கு ஆண்டுதோறும் பத்து லட்சம் வெள்ளிக்கும் மேற்பட்டத் தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இனங்களுக்கிடையை சமத்துவத்தை கடைபிடிக்கும் மாநில அரசின் கொள்கையை இது பிரதிபலிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய மின்சுடலைகள்



ஷா ஆலம் – வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்க விரும்பும் தரப்பினர் அதற்கான அனுமதியை ஊராட்சி மன்றங்களிடமிருந்து முறையாகப் பெற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய நடவடிக்கையின் வழி தேவையற்ற பிரச்னைகள் எதிர்காலத்தில் எழுவதை தவிர்க்க முடியும் என்று லீமாஸ் எனப்படும் பௌத்த, கிறிஸ்துவ, இந்து, சீக்கிய மற்றும் தோ சமய சிறப்பு செயல்குழுவின் இணைத் தலைவர் வீ.கணபதி ராவ் கூறினார். சட்டவிரோதமாக ஆலயங்கள் கட்டப்படும் பட்சத்தில் அவற்றை உடைப்பது உள்ளிட்ட கடும் நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இதனால் மேலும் கடுமையான சிக்கல்கள் உண்டாகும் என்று சமூக நலன், தொழிலாளர் மற்றும் பரிவுமிக்க அரசாங்கத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினருமான அவர் தெரிவித்தார். ஆலயங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் அதன் திட்டமிடல் தொடர்பாக விண்ணப்பம் செய்வது கட்டாய நிபந்தனையாகும் எனக் கூறிய அவர், இது நீண்டகால அடிப்படையில் உத்தரவாதம் அளிக்கக் கூடியது என்பதால் ஊராட்சி மன்றங்களின் நிபந்தனைகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றார். அங்கீகாரம் பெற்ற ஆலயங்களை அரசாங்க பதிவேட்டில் இடம் பெறச் செய்ய முடியும். மாநில அரசு இதுவரை சுமார் 300 ஆலயங்களை ஆர்ஜிதம் செய்துள்ளது என்று மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார். ஆலயங்களை சிறிய அளவில் நிர்மாணிக்கும்படி அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொண்ட அவர், இதன் வழி குறைந்த செலவில் ஆலயத்தை நிர்மாணிக்க முடியும் என்பதோடு நிர்வாகச் செலவினங்களையும் கட்டுப்படுத்த முடியும் என்றார்.


**ஹிஜ்ரா பங்கேற்பாளர்களுக்கு உதவ சிலாங்கூர் அரசு வெ.10 கோடி ஒதுக்கீடு**

பக்கம் 5


**சிலாங்கூர் பள்ளிகளுக்கு விரைவில் மானியம்**

பக்கம் 7

**தடுப்பூசி சான்றிதழ் பெற மருத்துவர்களுக்கு லஞ்சமா? எம்.ஏ.சி.சி. விசாரணை**

பக்கம் 14

## 7,000 மாணவர்களுக்கு இலவச இணைய தரவு



ஷா ஆலம் – சிலாங்கூர் டியூஷன் ராக்யாட் (பி.டி.ஆர்.எஸ்.) திட்டத்தில் பங்கேற்றுள்ள சுமார் 7,000 மாணவர்கள் இம்மாத இறுதியில் இலவச இணையச் சேவைக்கான சிம் கார்டுகளைப் பெறுவர். இதன் வழி அம்மாணவர்கள் ஓராண்டு காலத்திற்கு இலவச இணையச் சேவையை பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்று எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கழகத்தின் நிறுவன சமூக கடப்பாட்டுப் பிரிவுத் தலைவர் அகமது அஸ்ரி ஜைனால் நோர் கூறினார். இத்திட்டத்தை அடுத்த மாதம் தொடங்குவதற்கு முன்னதாக திட்டமிட்டிருந்தோம். எனினும், மாணவர்கள் இம்மாத இறுதியில் இச்சேவையைப் பெறுவதற்கு ஏதுவாக இத்திட்டத்தை விரைவுபடுத்தும்படி தொலை தொடர்பு நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டுள்ளோம் என்றார் அவர். இம்மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் 212 ஆசிரியர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் இலவச இணைய தரவு சேவை வழங்கப்படும் என்று அவர் சொன்னார். மீடியா சிலாங்கூர் நிறுவனத்தின் விளையாட்டு மற்றும் சமூக நல கிளப்பிற்கு 100 உணவுக் கூடைகளை வழங்கியப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இத்திட்டத்தில் பங்கு பெற இயலாமல் போனவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் இந்த இணைய தரவு திட்டத்தில் பங்கேற்கும் பி.டி.ஆர்.எஸ். மாணவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதற்குரிய வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். மாணவர்களுக்கான கோட்டா தீர்ந்து விடும் பட்சத்தில் வணிகர்களுக்கான கோட்டாவிலிருந்து மாணவர்களுக்கு தரவு சேவை பகிர்ந்தளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் வணிகர்களுக்கு 17,000 சிம் கார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

## சுல்தான் உத்தரவு - உதவிகள் தொடரும்



ரவாங் – கோவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் சிரமங்களை அறிந்து அவர்களுக்கு உரிய உதவிகளை வழங்க வேண்டும் என்ற மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தானின் உத்தரவை ஏற்று செயல்பட சட்ட மன்ற உறுப்பினர்கள் உறுதி பூண்டுள்ளனர். உதவி தேவைப்படும் குறைந்த வருமானம் பெறும் தரப்பினரை அடையாளம் காணும் பணியில் கிராமத் தலைவர்கள் உள்பட 50 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் சொன்னார். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பலர் வேலை இழப்புக்கு ஆளாகியுள்ளதை கருத்தில் கொண்டு பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் செயல்பட அனுமதிக்கப்பட்ட பிறகும் இத்தகைய உதவிகள் தொடரப்படும் என்று அவர் கூறினார். இந்த நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமலாக்க காலத்தில் தொகுதி மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களைச் சேர்ந்த 7,000 முதல் 8,000 பேருக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாக பண்டமாரான் சட்டமன்ற உறுப்பினர் லியோ தக் சீ தெரிவித்தார். பொதுமக்களில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு தேவைகள் உள்ளதால் அத்தேவைகளைக் கண்டறிவதற்காக தாங்கள் இனி வீடு வீடாகச் செல்லவுள்ளதாக அவர் தெரிவித்தார். அதே சமயம், வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மாணவர்களுக்கு உதவுவதற்காக அவர்களுக்கு கையடக்க கணினிகளை வழங்கும் நடவடிக்கையிலும் தாங்கள் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, மூத்த குடிமக்கள் உள்பட வசதி குறைந்த தரப்பினருக்கு சமைத்த உணவை வழங்கும் நடவடிக்கைகளை தாங்கள் முன்னெடுத்துள்ளதாக புக்கிட் காசிங் உறுப்பினர் ஆர். ராஜீவ் கூறினார். மூத்த குடிமக்களில் பலர் சொந்தமாக சமைக்க இயலாத நிலையில் உள்ளனர். இத்தகைய தரப்பினர் பற்றிய தகவல்கள் எங்கள் தொகுதி சேவை மையத்திடம் தெரிவிக்கப்படும் பட்சத்தில் நாங்கள் அவர்களுக்கான உணவை கடைகளில் ஆர்டர் செய்வோம். சம்பந்தப்பட்டவர்கள் அங்கு சென்று உணவைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் களத்தில் இறங்கி சிரமத்தை எதிர்நோக்கியிருக்கும் மக்களுக்கு உரிய உதவிகளை வழங்க வேண்டும் என்று மேன்மை தங்கிய சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கடந்த மாதம் 23 ஆம் தேதி கூறியிருந்தார்.

## நீர் தூய்மைக்கேடு- தொழிற்சாலைக்கு சிக்கல்



புத்ரா ஜெயா – சுங்கை செமினி ஆற்று நீரில் துர்நாற்றம் வீசுவதற்கு காரணமாக இருந்ததாக சந்தேகிக்கப்படும் தொழிற்சாலைக்கு எதிராக சிலாங்கூர் மாநில சுற்றுச்சூழல் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. பெரேனோங்கில் உள்ள உணவுப் பொருள் தயாரிப்பை அடிப்படையாக கொண்ட அந்த தொழிற்சாலையை இரு வாரங்களுக்கு மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக காசா எனப்படும் சுற்றுச்சூழல் மற்றும் நீர் வள அமைச்சு அறிக்கை ஒன்றில் கூறியது. கடந்த மாதம் 31ஆம் தேதியும் இம்மாதம் 3 ஆம் தேதியும் சுங்கை செமினி நீர் சுத்திகரிப்பு மையம் மூடப்படுவதற்கு காரணமாக இருந்தது தொடர்பில் அந்த தொழிற்சாலைக்கு எதிராக சிலாங்கூர் மாநில சுற்றுச்சூழல் துறை விசாரணை அறிக்கையை தயார் செய்துள்ளதாக அவ்வமைச்சு குறிப்பிட்டது. இம்மாதம் 2 மற்றும் 3ஆம் தேதிகளில் சிலாங்கூர் மாநில சுற்றுச்சூழல் துறை மேற்கொண்ட சோதனையில் அந்த உணவுப் பொருள் தயாரிப்பு தொழிற்சாலை செயல்பட்டு வந்தது உறுதி செய்யப்பட்டதோடு அத்தொழிற்சாலையிலிருந்து தொழிலியல் கழிவுகளும் செமினி ஆற்றில் எடுக்கப்பட்ட நீரின் மாதிரியும் சோதனைக்காக மலேசிய இரசாயன இலாகாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அது தெரிவித்தது. செமினி ஆற்றில் கடந்த மாதம் 31 ஆம் தேதி மற்றும் இம்மாதம் 3 ஆம் தேதிகளில் நீர் மாசுபாடு அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து புத்ரா ஜெயா, சிப்பாங், கோல லங்காட், உலு லங்காட் மற்றும் பெட்டாலிங் மாவட்டங்களில் உள்ள 563 பகுதிகளில் நீர் விநியோகத் தடை ஏற்பட்டது.

# 2020 ஜனவரி முதல் 2,245 கோடி வெள்ளி முதலீட்டை சிலாங்கூர் பெற்றது



ஷா ஆலம் – கடந்தாண்டு ஜனவரி முதல் தற்போது வரை 441 தொழிற்சாலைத் துறை வாயிலாக 2,245 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீட்டை சிலாங்கூர் மாநிலம் பெற்றது.


அவற்றில் 1,043 கோடி வெள்ளி முதலீடு உள்நாட்டிலிருந்தும் 1,202 கோடி வெள்ளி முதலீடு வெளிநாடுகளிலிருந்தும் பெறப்பட்டதாக முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழில்துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் தெரிவித்தார்.

இந்த முதலீடுகளின் வாயிலாக 27,491 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டதாக மாநில சட்டமன்றத்தில் அவர் கூறினார்.

சிலாங்கூரில் முதலீடு செய்வதற்குரிய நம்பிக்கையை முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக இன்வெஸ்ட் சிலாங்கூர் அமைப்பின் வாயிலாக பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அவர் சொன்னார். இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலக்கட்டத்தில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை நிலைக்குழுவின் வாயிலாக மாநில அரசு மேற்கொண்டது என அவர் தெரிவித்தார். கடந்தாண்டு ஜனவரி முதல் தற்போது வரை மாநிலத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் தொடர்பில் உலு பெர்ணம் உறுப்பினர் டத்தோ ரோஸ்ன் சோஹார் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான தடை இன்னும் அமலில் உள்ள போதிலும் மாநிலத்தில் முதலீடு செய்வதில் ஆர்வம் கொண்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இயங்கலை வாயிலாக பேச்சு நடத்தும் நடவடிக்கையில் இன்வெஸ்ட் சிலாங்கூர் ஈடுபட்டு வருகிறது என்றார் அவர்.

# 120,000 சிலாங்கூர் கூ வீடுகளை நிர்மாணிக்க விண்ணப்பம்



ஷா ஆலம் – இவ்வாண்டில் 120,000 சிலாங்கூர் கூ வீடுகளை நிரமாணிப்பதற்கான விண்ணப்பங்களை சிலாங்கூர் மாநில அரசு பெற்றதாக வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

அவற்றில் 60,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை வாரியம் ஒப்புதல் அளித்துள்ள வேளையில் 20,000 வீடுகள் கிள்ளான் பள்ளத்தாக்கு பகுதியில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதாக அவர் சொன்னார்.

கட்டுமானத்துறை செயல்படுவதற்கு அனைத்துலக வாணிக மற்றும் தொழிலியல் அமைச்சு தாமதமாக அனுமதி வழங்கிய காரணத்தால் சிலாங்கூர் கூ வீடமைப்புத் திட்டத்தை தொடர்வதில் தாமதம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எனினும், இத்திட்டம் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தாங்கள் மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இன்று ஹைக்கோமில் உள்ள மக்கள் குடியிருப்பு திட்ட (பி.பி.ஆர்.) பகுதியில் மக்கள் நட்புறவு சந்தைத் திட்டத்தை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வீடுகள் கட்டி முடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக வேலை நேரத்திற்கு அப்பாலும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பல மேம்பாட்டாளர்கள் தங்களிடம் விண்ணப்பித்துள்ளதாகவும் ரோட்சியா சொன்னார்.

## சிலாங்கூர் பிப்ரவரியில் கொள்முதல் செய்த தடுப்பூசியை காலம் தாழ்த்தியது ஏன்

# பந்திங் உறுப்பினர் கேள்வி

ஷா ஆலம் – இவ்வாண்டு ஆகஸ்ட் 23 வரை சிலாங்கூர் அரசு மொத்தம் 7,499,702 கோவிட் -19 தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுள்ளது என்று டாக்டர் சித்தி மரியா மஹ்மூத் கூறுகிறார்.

பொது சுகாதாரத்திற்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பிரான அவர், மாநிலம் பிப்ரவரியில் தேசிய கோவிட் -19 நோய்த்தடுப்பு (PICK) தொடக்கத்தில் குறைந்த எண்ணிக்கையிலான தடுப்பூசிகளைப் பெற்றதாகக் கூறினார், மொத்தம் 52,650 அளவுகள். இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது, ஜூலை மாதத்தில், சிலாங்கூர் மொத்தம் 3,794,800 அளவுகளைப் பெற்றது.

"எங்களுக்கு வழங்கப்பட்ட கோவிட் -19 தடுப்பூசி அளவுகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கையிலிருந்து, 3,364,920 டோஸ் கொமினார்டி (ஃபைசர்-பயோஎன்டெக்) தடுப்பூசிகள், 3,874,982 டோஸ் கொரோனாவாக் (சினோவாக்) மற்றும் 259,800 டோஸ் அஸ்ட்ராஜெனெகா," என்று அவர் சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தில் கூறினார்.

இதற்கிடையில், மத்திய அரசு, மாநில அரசால் கொள்முதல் செய்யப்பட்ட தடுப்பூசிகளை பயன்பாட்டிற்கு அனுமதி அளிக்கப் பட்டிருந்தால், மாநில அரசின் நோய்த்தடுப்பு திட்டம் முன்பே தொடங்கியிருக்கலாம் என்று டாக்டர் சித்தி மரியா கூறினார்.

மாநிலத்தால் வாங்கப்பட்ட தடுப்பூசிகளைப் பெறுவதில் தாமதம் குறித்து பந்திங் மாநில சட்டமன்ற உறுப்பினர் லாவ் வெங் சானின் துணை கேள்விக்கு பதிலளித்த அவர், 2.5 மில்லியன் டோஸ் பிப்ரவரியில் வாங்கப்பட்டது, ஆனால் ஜூன் மாதத்தில் மட்டுமே அது வெளியிடப் பட்டது. "மொத்த டோஸ் ஏற்கனவே எங்களுக்கு ஒதுக்கப் பட்டது, ஆனால் தடுப்பூசி விநியோகஸ்தர்கள் தேசிய தடுப்பூசி திட்டம் (பகுதி) முடியும் வரை அதை மாநிலத்திற்கு வழங்க அனுமதிக்கவில்லை.

"நாங்கள் முன்கூட்டியே ஆரம்பித்திருக்கலாம் மற்றும் இளைய மக்களுக்கு தடுப்பூசி போடுவதற்கும் மத்திய அரசின் திட்டத்தை நிறைவு செய்வதற்கும் ஒரு காப்புப்பிரதியாக இருக்க திட்டமிட்டிருந்தோம், ஏனெனில் மூன்றாம் கட்டம் (PICK இன்) நீண்ட காலம் எடுக்கும் என்பதை நாங்கள் அறிவோம்," என்று அவர் மூன்றாவது குறிப்பில் கூறினார்.

மே முதல் டிசம்பர் வரை நடத்த திட்டமிடப்பட்டிருந்த 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது வந்தவர்களுக்கு தடுப்பூசி போடும் கட்டம். "ஒருவேளை நாம் முன்பே ஆரம்பித்திருந்தால், இளம் வயதினருக்கு விரைவில் தடுப்பூசி போடப்பட்டிருக்கலாம், மேலும் எங்களால் கோவிட் -19 (இளைய மக்களிடையே இறப்பு விகிதம்) குறைக்க முடியும்."

சிலாங்கூர் அரசாங்கம் ஜூன் மாதத்தில் தனது சிலாங்கூர் தடுப்பூசி திட்டத்தை (செல்வாக்ஸ்) PICK ஐ பூர்த்தி செய்யத் தொடங்கியது. செல்வாக்ஸ் தொழில் மற்றும் செல்வாக்ஸ் சமூக முன்முயற்சிகள் மூலம் நான்கு மாதங்களில் 1.25 மில்லியன் மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடுவதை இலக்காகக் கொண்ட கோவிட் -19 தடுப்பூசி வெளியீட்டிற்காக அரசு 2.5 மில்லியன் அளவுகளை வாங்கியது.

# கோல லங்காட் உத்தாரா பாதுகாக்கப்பட்ட வனத்தின் 46 விழுக்காட்டுப் பகுதி நிலை நிறுத்தப்படும்




ஷா ஆலம் — கோல லங்காட் உத்தாரா பாதுகாக்கப்பட்ட வனத்தின் 46 விழுக்காட்டுப் பகுதியை சிலாங்கூர் மாநில அரசு நிரந்தர வனப்பகுதியாக தொடர்ந்து நிலை நிறுத்தும். அந்த பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் 1,326.33 ஏக்கர் பகுதியை மட்டுமே மேம்பாட்டு நிலமாக தகுதி மாற்றம் செய்ய கடந்த மே மாதம் 19 ஆம் தேதி நடைபெற்ற மாநில ஆட்சிக்குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது என்று மாநில வன இலாகாவின் இயக்குநர் டத்தோ அகமது ஃபாட்சில் அப்துல் மஜிட் கூறினார். இந்த நிலத்திற்கு மாற்றாக இரு வெவ்வேறு இடங்களில் 1,436 ஏக்கர் நிலத்தை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக ஒதுக்குவதற்கும் அங்கீகாரம் தரப்பட்டதாக அவர் சொன்னார்.

சபாக் பெர்ணம் மாவட்டத்தில் சுங்கை பாஞ்சாங்கில் 762.29 ஏக்கர் நிலமும் கோல லங்காட் மாவட்டத்தின் புக்கிட் புரோகா பகுதியில் 557.86 ஏக்கர் நிலமும் உலு சிலாங்கூர், அம்பாங் பெச்சா துணை மாவட்டத்தின் பூலோ தெலுர் பகுதியில் 516.40 ஏக்கர் நிலமும் இந்நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டது என்றார் அவர்.

அதே சமயம் கோல லங்காட் உத்தாரா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் எஞ்சியுள்ள 46 விழுக்காட்டு பகுதியை மாநில அரசு தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட பகுதியாக நிலை நிறுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வீடமைப்பு உள்ளிட்ட கலவையான மேம்பாட்டுத் திட்டங்களுக்காக கோல லங்காட் உத்தாரா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் ஒரு பகுதியை பயன்படுத்துவது தொடர்பான அறிவிப்பை மாநில அரசு கடந்த பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி வெளியிட்டது.

# மக்களுக்கு சுத்தமான குடிநீரளிக்க பல்வேறு திட்டங்களை மாநில அரசு மேற்கொண்டுள்ளது



ஷா ஆலம் – ஆற்று நீரை குடிநீருக்கு மற்றும் சஹைப்ரிட் ஆஃப் ரிவர் ஆக்மென்டேஷன் ஸ்டோரேஜ் (ஹோராஸ்) 600 திட்டம் செப்டம்பரில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது, இது மாநிலத்தில் நீர் மாசுபாடு பிரச்சினையை சமாளிக்க மாநில அரசால் செயல்படுத்தப்படும் மற்ற நான்கு திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

உள்கட்டமைப்பிற்கான மாநில நிர்வாக கவுன்சிலர் இஷாம் ஹாசிம், நான்கு வேலைத் தொகுப்புகளை உள்ளடக்கிய மூல நீர் சேனல் திட்டத்திற்கான ஒப்பந்ததாரர் நியமனம் தற்போது நடைபெற்று வருகிறது என்றார். இந்த திட்டம் 2022 இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

ஆர்க்கிமீடியன் ஸ்க்ரூ பம்ப் சிஸ்டம் மற்றும் கம்போங் சுங்கை டாரா, பெஸ்தாரி ஜெயா, கோலா சிலாங்கூரில் உள்ள ஹோராஸ் 600 குளங்கள் மற்றும் கோலா சிலாங்கூரில் உள்ள ரந்தாவ் பஞ்சாங் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் (WTP) நீர் உட்கொள்ளல், நிறுவல், நிறுவுதல், சோதனை மற்றும் ஆணையிடுதல் ஆகியவை தொகுப்புகளில் அடங்கும்.

“இந்த செயல்முறை எஸ்எஸ்பி 1, 2 மற்றும் 3 டபிள்யுடிபியில் பெஸ்தாரி ஜெயா, கோலா சிலாங்கூர் மற்றும் சுங்கை செமிஞ்சே டபிள்யூடிபியில் ஜெஞ்சாரம் ஹிலிரில் நதி திசைமாற்றத்தை உருவாக்குவதை உள்ளடக்கியது,” என்று இசாம் இன்று சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தில் கூறினார்.

கடந்த ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதி, மாநிலத்தின் மூல நீர் மாசுபாடு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நான்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2021 சிலாங்கூர் பட்ஜெட்டில் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி ரிம 200 மில்லியன் ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார்.

சுங்கை சிலாங்கூர் மற்றும் சுங்கை செமிஞ்சே ஆகியவற்றில் மூல நீரைச் சேர்ப்பதற்கான ஹோராஸ் 600 திட்டம் தவிர, பிற நடவடிக்கைகளில் சுங்காய் கோங்கின் நீரை உயிரியல் ரீதியாக சுத்திகரித்து மீட்டெடுப்பதற்கான ஒரு பைலட் திட்டம், அதிக ஆபத்துள்ள நீர் எடுக்கும் பகுதிகளில் இடங்களில் மாசுபடுத்திகள் மீது 24 மணி நேர கண்காணிப்பு மற்றும் ஸ்குவாட் பாண்டாஸ் வழியாக முக்கியமான நீர் ஆதாரப் பகுதிகளைக் கண்காணித்தல் போன்ற பல நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருகிறது.

# கோல லங்காட் உத்தாரா வனப்பகுதி தகுதி மாற்றப் பரிந்துரை மீது ஓராண்டு காலத்திற்கு ஆய்வு



ஷா ஆலம் – கோல லங்காட் உத்தாரா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியை தகுதி மாற்றம் செய்வது தொடர்பான பரிந்துரை மீது பொது விசாரணைக்குழு ஓராண்டிற்கும் மேல் விசாரணை மேற்கொண்டது. இந்த விசாரணையின் போது பெறப்பட்ட அனைத்து ஆட்சேபங்களும் ஒன்று திரட்டப்பட்டு மேல் நடவடிக்கைக்காக மாநில ஆட்சிக்குழுவின் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டதாக சிலாங்கூர் வன இலாகா இயக்குநர் டத்தோ அகமது ஃபாட்சில் மஜிட் கூறினார். மொத்தம் 991.90 ஹெக்டர் பரப்பளவு பகுதியை உள்ளடக்கிய பரிந்துரையை கோல லங்காட் மாவட்ட நில அலுவலகம் கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் தேதி பெற்றதாக அவர் சொன்னார்.

பொது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், பாதுகாக்கப்பட்ட நிரந்தர வனப்பகுதியை பொருளாதார நோக்கத்திற்காக தகுதி மாற்றம் செய்ய 1985 ஆம் ஆண்டு (2011இல் திருத்தப்பட்டது) சிலாங்கூர் மாநில வனச் சட்டத்தின் 11 பிரிவு வகை செய்கிறது என்று அவர் கூறினார்.

தகுதி மாற்றம் செய்யப்படும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் சூழியல் முறைக்கும் பரப்பளவுக்கும் இணையான அல்லது அதை விட சிறந்த நிலம் மாற்று வனப்பகுதியாக வழங்கப்பட வேண்டும் என்று அச்சட்டத்தின் 12வது பிரிவு கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வீடமைப்பு உள்ளிட்ட கலவையான மேம்பாட்டுத் திட்டம் கோல லங்காட் உத்தாரா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் மேற்கொள்ளப்படும் என்று மாநில அரசு கடந்த பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி கூறியிருந்தது. இவ்விவகாரம் தொடர்பில் தனிநபர்கள், அரசு சாரா அமைப்புகள், அரசாங்க நிறுவனங்களின் கருத்தைப் பெறுவதற்காக அதே ஆண்டு செப்டம்பர் 27 ஆம் தேதி பொது சந்தைப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

சவுஜானா புத்ரா, இலிட் நெடுஞ்சாலை, லாடாங் போ புக்கிட் சீடிங், கமுடா கோவ் உள்பட சுற்றுப்புறங்களில் காணப்படும் துரித வளர்ச்சி காரணமாக கோல லங்காட் உத்தாரா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

# பெடுலி சேஹாட் காப்புறுதி திட்டத்தின் வழி 67,348 பேர் பயன்



ஷா ஆலம் – சிப்ஸ் எனப்படும் பெடுலி சேஹாட் காப்புறுதி திட்டத்தின் வழி கடந்த மாதம் 31ஆம் தேதி வரை 67,348 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு வருடாந்திர மானியமாக 4 கோடியே 24 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் இதுவரை 3 கோடியே 76 லட்சம் வெள்ளி செலவிடப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

எஞ்சியத் தொகை மூன்றாம் கட்ட கோவிட்-19 பரிசோதனை இயக்கத்திற்கு பயன்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் மூலம் கடந்தாண்டில் 79,275 பேர் பயன்பெற்றதாக மாநில சட்டமன்றக் கூட்டத்தில் அவர் சொன்னார். குறைந்த வருமானம் பெறுவோர் சிகிச்சை, ஆலோசக சேவை மற்றும் மருந்துகளைப் பெறுவதற்கு வகை செய்யும் நோக்கில் இந்த பெடுலி சேஹாட் காப்புறுதி திட்டம் கடந்த 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். மாதம் 2,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் பெறும் சுமார் 85,000 குடும்பங்கள் அடிப்படை மருத்துவ சேவையை பெறுவதற்கு ஏதுவாக அத்திட்டம் கடந்தாண்டில் தரம் உயர்த்தப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு 500 வெள்ளி வரையிலும் திருமணமாகாதவர்களுக்கு 200 வெள்ளி வரையிலும் சிகிச்சைக்கான செலவுத் தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இது தவிர மரணம் அல்லது நிரந்தர முடத்தன்மையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,000 வெள்ளி, மரண சகாய நிதியாக 1,000 வெள்ளி, கடும் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,000 வெள்ளி மற்றும் இயற்கை மரணங்களுக்கு 5,000 வெள்ளி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

## ஹிஜ்ரா பங்கேற்பாளர்களுக்கு உதவ சிலாங்கூர் அரசு வெ.10 கோடி ஒதுக்கீடு




ஷா ஆலம் – ஹிஜ்ரா சிலாங்கூர் கடனுதவித் திட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு உதவும் திட்டங்களுக்காக மாநில அரசு 10 கோடியே 50 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது.

கித்தா சிலாங்கூர் 1.0 மற்றும் கித்தா சிலாங்கூர் 2.0 திட்டங்களின் வாயிலாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தொழில்முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார். தொழில் முனைவோர் இயங்கலை வாயிலாக வருமானம் ஈட்டுவதற்கு வகை செய்யும் நோக்கில் 1 கோடியே 50 லட்சம் வெள்ளி ஒதுக்கீட்டில் கோ டிஜிட்டல் திட்டம் கித்தா சிலாங்கூர் 1.0 உதவித் தொகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்டதாக அவர் சொன்னார். இது தவிர, வருமானம் இழந்த நிலையில் வர்த்தகத்தின் வழி வருமானத்திற்கான புதிய வழியைத் தேடுவோருக்கு உதவும் நோக்கில் 1 கோடி வெள்ளி நிதி ஒதுக்கீட்டில் "நாடி" எனப்படும் நியாகா டாருள் ஏசான் திட்டம் அமல்படுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

மாநில சட்டமன்றத்தில் இன்று ஹிஜ்ரா திட்டத்தில் கடனுதவி பெற்றவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு மாநில அரசு மேற்கொண்டு வரும் திட்டங்கள் குறித்து செமெந்தா உறுப்பினர் டாக்டர் டரோயா அல்வி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

## கெடா, சகதி வெள்ள நிவாரணப் பணிகளுக்கு சிலாங்கூர் 100,000 வெள்ளி நன்கொடை



யான் – கடந்த மாதம் 18ஆம் தேதி ஏற்பட்ட சகதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கெடா மாநிலத்தின் யான் பகுதியில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சிலாங்கூர் மாநிலம் ஒரு லட்சம் வெள்ளியை வழங்கி உதவியுள்ளது.

இப்பேரிடரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தித்தி ஹயுன் நீர் வீழ்ச்சி பகுதிக்கு மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி நேற்று நேரில் வருகை மேற்கொண்டார். அப்பயணத்தின் போது அவர் அந்த நிவாரணத் தொகையை கெடா மாநிலத்தின் மனித வளத்துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஓய்வு பெற்ற பிரிகேடியர் ஜெனரல் டத்தோ நஜ்மி அகமதுவிடம் ஒப்படைத்தார். மேலும் செல்கேட் அறவாரியம் வழங்கிய அத்தியாவசிய பொருள்கள் மற்றும் உபகரணங்களை அவர் பாதிக்கப்பட்ட மக்களிடம் வழங்கினார். இது தவிர, இந்த பேரிடரில் உயிரிழந்த அறுவரின் குடும்பத்தினருக்கும் அவர் உதவித் தொகையை ஒப்படைத்தார்.

அந்த வெள்ளப் பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் கெடா மாநிலம் எதிர்நோக்கும் சுமையை சிலாங்கூர் அரசின் இந்த உதவி ஓரளவு குறைக்கும் என அமிருடின் நம்பிக்கைத் தெரிவித்தார். அந்த பேரிடரால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்வதற்கு கெடா மாநிலத்திற்கு ஆறு கோடி வெள்ளி வரை தேவைப்படும் நிலையில் சிலாங்கூர் அரசின் இந்த உதவி மிகவும் சிறியதுதான். எனினும், உதவித் தேவைப்படுவோருக்கும் மாநில அரசின் திட்டங்களுக்கும் இந்த நிதியைப் பயன்படுத்திக் கொள்வது மாநில அரசைப் பொறுத்ததாகும் என்றார் அவர்.

# மாநில அரசு-மத்திய துறைகளின் ஒத்துழைப்பினால் பி.கே.பி.டி ஆணை முன்கூட்டியே நீக்கம்



ஷா ஆலம் – மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமல்படுத்தப்பட்ட கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை (பி.கே.பி.டி.) முன்கூட்டியே அகற்றப்பட்டதற்கு மாநில அரசு மற்றும் மாவட்ட நிர்வாகங்களுக்கிடையே காணப்பட்ட அணுக்கமான ஒத்துழைப்பே காரணம் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்பட அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கை உரிய பலனைத் தந்துள்ளதாக அவர் சொன்னார். சிலாங்கூர் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்ட பி.கே.பி.டி. ஆணைகள் ஐந்து அல்லது எட்டு நாட்களுக்கு முன்னதாகவே அகற்றப்பட்டன. அனைத்து தரப்பினரையும் நாம் எவ்வாறு ஒன்றிணைத்தோம் என்பதற்கு இதுவே தக்க சான்றாகும் என்றார் அவர். சட்டமன்றத்தில் இன்று கோவிட்-19 நோய்த் தொற்றை எதிர்கொள்வதில் மாவட்ட பேரிடர் மேலாண்மை பொறுப்பாளர்களின் பங்கேற்பு குறித்து செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் மந்திரி புசார் இவ்வாறு கூறினார். டாமன்சாரா, டாமாய் அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு வாரத்திற்கு முன்னதாகவும் கோத்தா டாமன்சாரா குகுசான் செமராக் அடுக்குமாடி குடியிருப்பில் ஐந்து நாட்களுக்கு முன்னதாகவும் கோம்பாக், தாமான் சமூட்ரா தீமோரில் மூன்று நாட்களுக்கு முன்னதாகவும் பி.கே.பி.டி. ஆணை அகற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலவச இணைய தரவு சலு கையை பெற்றவர்கள் இயங்கலை வழி வர்த்தகம் புரிய ஊக்குவிப்பு



ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசின் இலவச இணைய தரவு சேவைக்கான சிம் கார்டுகளைப் பெறுவோர் இயங்கலை வாயிலாக வர்த்தகம் புரிய ஊக்குவிக்கப்படுகின்றர்.

பன்னிரண்டு மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும் இந்த இலவச இணைய தரவு சலுகையை பெற்றவர்கள் அதனை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

இந்த திட்டத்திற்கு நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. 17,000 பேருக்கு மட்டுமே இத்திட்டத்தில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும் என்பதால் விண்ணப்பங்களை கவனமாகக் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. இருப்பினும், இத்திட்டத்திற்கு இம்மாதம் 15 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்றார் அவர். இங்குள்ள ஹைக்கோம் பி.பி.ஆர். அடுக்குமாடி குடியிருப்பில் மக்கள் நட்புறவு சந்தையை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பன்னிரண்டு மாதங்களுக்கு இலவசமாக இணைய சேவையை வழங்கக்கூடிய சிம் கார்டுகள் மாநிலத்தில் உள்ள 70,000 பேருக்கு வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த மாதம் 4 ஆம் தேதி அறிவித்திருந்தார்.


## சிலாங்கூர் அரசின் தடுப்பூசிகள் பினாங்கிற்கு இன்று விநியோகம்



ஷா ஆலம் – பினாங்கு மாநிலத்திற்கு சிலாங்கூர் இரவலாக வழங்கும் 200,000 தடுப்பூசிகள் இன்று அம்மாநிலத்திடம் சேர்ப்பிக்கப்படும். பினாங்கு மக்கள் தடுப்பூசியை விரைந்து பெறுவதை உறுதி செய்வதில் சிலாங்கூர் அரசின் இந்த உதவி பெரிதும் துணை புரியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரவலாக வழங்கும் 200,000 தடுப்பூசிகள் தவிர்த்து செல்வேக்ஸ் திட்டத்தின் கீழ் மேலும் 20,000 தடுப்பூசிகள் அம்மாநிலத்திற்கு இலவசமாக வழங்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். சிலாங்கூரில் ஏற்பட்டதைப் போன்ற பிரச்னை பினாங்கிற்கும் ஏற்படக்கூடாது. ஆகவே அம்மாநிலத்திற்கு இரண்டு லட்சம் தடுப்பூசிகளை இரவலாகவும் இருபதாயிரம் தடுப்பூசிகளை இலவசமாகவும் வழங்கவிருக்கிறோம் என்றார் அவர். பினாங்கு மட்டுமின்றி இதர மாநிலங்களும் சிலாங்கூரிடமிருந்து தடுப்பூசிகளை இரவலாகப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்துள்ளதாக மாநில சட்டமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

நமது அண்டை மாநிலம் ஒன்றும் தடுப்பூசிகளுக்கு நம்மிடம் விண்ணப்பம் செய்துள்ளது. எனினும், இவ்விவகாரத்தில் பினாங்கு மாநிலத்தைப் போல் தளர்வுகளும் ஒருங்கிணைப்பும் ஏற்படுவதற்கு ஏதுவாக மத்திய அரசின் கவனத்திற்கு இதனைக் கொண்டுச் செல்லும்படி கேட்டுக் கொண்டுள்ளேன் என்றார் அவர்.

# சிலாங்கூர் பள்ளிகளுக்கு விரைவில் மானியம்



ஷா ஆலம் : இந்த ஆண்டுக்கான உதவிக்கு விண்ணப்பித்துள்ள பள்ளிகளுக்கு மாநில அரசு உடனடியாக ஒதுக்கீடுகளை விநியோகிக்கும் என்று டத்தோ மந்திரி புசார் கூறினார்.

டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தனது கவனத்திற்கு 703 விண்ணப்பங்கள், அதாவது 462 ராக்யாட் சமய பள்ளிகள், 121 சீன தேசிய வகை பள்ளிகள் (SJK) மற்றும் 101 தமிழ்ப்பள்ளிகளின் SJK கோரிக்கைகள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அவரைப் பொறுத்தவரை, விண்ணப்பத்தில் 15 மிஷனரி பள்ளிகள் மற்றும் நான்கு தேசிய வகை மேல்நிலைப் பள்ளிகளும் அடங்கும். "நாங்கள் பள்ளிகளுக்கு நிதி வழங்கும் திட்டத்தை தொடர்வோம், ஆனால் நடப்பிலிருந்த நடமாட்ட கட்டுப்பாட்டு உத்தரவு (PKP) காரணமாக நாங்கள் இதற்கான தரவுகளை சேகரித்திருந்தும், உடனடியாக மானியம் வழங்க முடியவில்லை.

சிலாங்கூர் சட்டமன்ற (கூட்டத்திற்கு) பிறகு நாங்கள் உடனடியாக ஒதுக்கீடுகளை விநியோகிப்போம். "இந்த ஆண்டு, நாங்கள் ஒரு சுற்றில் மட்டுமே மானியம் விநியோகிப்போம்" என்று இன்று இங்கு மாநில சட்டமன்ற அமர்வில் கோலா குபு பாரு சட்டமன்ற உறுப்பினர் லீ கீ ஹியோங்கின் கேள்விக்கு பதிலளிக்கும் போது கூறினார்.

கோவிட் -19 தொற்றுநோயால் வருமானம் பாதிக்கப்பட்ட பள்ளிகளுக்கு மாநில பரிவுமிக்க அரசின் கொள்கைக்கு ஏற்ப இந்த உதவி இருப்பதாக அமிருடின் கூறினார். "உண்மையில், இந்த பள்ளிக்கு பி.கே.பியில் உதவி தேவைப்படுகிறது, ஏனெனில் அதன் வருமானத்தின் ஒரு பகுதி கட்டணங்கள் மூலம் பெறப்படுகிறது, ஆனால் பள்ளியைத் திறக்க முடியாததால் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை சமாளிக்க இது உதவும்," என்று அவர் கூறினார்.

# பண்டான் இண்டா தொகுதியில்

## 8,000 பேருக்கு உணவுக் கூடைகள் விநியோகம்



ஷா ஆலம் – கடந்தாண்டு டிசம்பர் மாதம் முதல் பண்டான் இண்டா தொகுதியைச் சேர்ந்த சுமார் 8,000 பேருக்கு உணவுக் கூடைகள் வழங்கப்பட்டன. கோவிட்-19 நோய்த் தொற்று மற்றும் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

தொகுதி சேவை மையத்தின் வாயிலாக மாதந்தோறும் சுமார் ஐம்பது வெள்ளி மதிப்பிலான 1,000 உணவுக் கூடைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

பொதுமக்களுக்கு அதிக உதவிகளை வழங்கிய தொகுதிகளில் பண்டான் இண்டா தொகுதியும் ஒன்றாகும். மாநில அரசு தவிர்த்து தனியார் துறையிடமிருந்தும் நாங்கள் உதவிகளைப் பெற்றோம். இதன் மூலம் மாதம் 50,000 வெள்ளி செலவில் 1,000 உணவுக் கூடைகளை விநியோகிக்க முடிந்தது என்றார் அவர்.

பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவிகள் சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தொகுதிக்கு வெளியில் உள்ளவர்களுக்கும் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று அவர் சொன்னார்.

இது தவிர, வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கு உதவும் பொருட்டு 500 கையடக்க கணினிகளும் 200 மடிக்கணினிகளும் விநியோகிக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

# "கிஸ்" திட்ட பயனாளிகள் பட்டியல் மீண்டும் சரிபார்க்கப்படும்



ஷா ஆலம் – கிஸ் எனப்படும் சிலாங்கூர் மாநில பரிவுமிக்க அன்னையர் உதவித் திட்ட பயனாளிகளின் பட்டியல் மீண்டும் சரிபார்க்கப்படவுள்ளது. தகுதி உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் வாயிலாக பயன்பெறுவதை உறுதி செய்வதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சமூக நலத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதி ராவ் கூறினார். இந்த "கிஸ்" திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 25,000 இடங்கள் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைக் கொண்டவர்களை கொண்டு நிரப்பப்படுவதை உறுதி செய்ய தாங்கள் விரும்புவதாக அவர் சொன்னார். கடந்த ஆகஸ்டு மாதம்ம 5 ஆம் தேதி வரை மொத்தம் 20,371 பேர் "கிஸ்" திட்டத்தின் மூலம் பயன்பெற்றுள்ளனர். அவர்களில் 20,371 பேர் "கிஸ்" திட்டத்தின் வாயிலாகவும் 1,363 பேர் "கிஸ்–ஐடி" எனப்படும் தனித்து வாழும் தாய்மார்களுக்கான திட்டத்தின் வாயிலாகவும் பயன்பெற்றனர் என்றார் அவர். நேற்று மாநில சட்டமன்றத்தில் மேன்மை தங்கிய சுல்தானின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான முடிவுரையின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தொலைபேசி எண்களின் மாற்றம் போன்ற மூத்த குடிமக்கள் பரிவுத் திட்ட (எஸ்.எம்.யு.இ.) உறுப்பினர்கள் தொடர்பான தகவல் புதுப்பிப்பு நடவடிக்கைகள் யாவும் சட்டமன்றத் தொகுதி சேவை மைய நிலையில் மட்டும் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். தொலைபேசி எண் மாற்றம் தவிர்த்து இதர தகவல்களைப் புதுப்பிக்கும் பணிகளை யாவாஸ் அறவாரிய நிலையில் மட்டுமே மேற்கொள்ள இயலும். முறைகேடான வழியில் தகவல்களை மாற்றுவது அல்லது தவறுதலாக தகவல்களைச் சேர்ப்பது போன்ற சம்பவங்கள் நிகழ்வை தடுக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார் அவர். உறுப்பினர்களின் இறப்பு தொடர்பான தகவல்கள் யாவாஸ் அறவாரியத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் எனக் கூறிய அவர், இதன் மூலம் உண்மையான தகவல் கிடைப்பதை உறுதி செய்யவும் வாரிசுகள் சட்டமன்ற சேவை மையங்கள் வாயிலாக அல்லாமல் தனியாக நிதிக் கோரிக்கையை முன்வைப்பதை தவிர்க்கவும் இயலும் என்றார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 14/ 8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

# மலேசிய சுதந்திரத்தில் தோட்டத்தொழிலாளர்கள் பங்கு



நம் நாடு ஆகஸ்ட் மாதம் 31ம் தேதி 1957ல் ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை பெற்றது. அன்று சுதந்திர பேச்சு வார்த்தைகளில் இந்த நாட்டு மக்களுக்கு தலைமையேற்றவர் துங்கு அப்துல் ரஹ்மான், அவருடன் மலாயா இந்தியர்களின் பிரதிநிதியாக துன் வீ.தி சம்பந்தன் அவர்களும் சீன சமுதாயத்தை ம.சீ.ச பிரதிநிதியும் பிரதிநிதித்து நாட்டின் சுதந்திர பேச்சுவார்த்தைக்கு லண்டன் சென்ற தூது குழுவில் இடம் பெற்றனர்.

## ஏன் சுதந்திரம் ?

சுதந்திர போராட்டத்தில் இந்தியா, பர்மா, ஸ்ரீலங்கா, மலேசிய மக்கள் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றனர்.

ஜப்பானியர்கள் மலாயா மீது போர் தொடுத்த போது ஆங்கிலேயர்கள் இந்நாட்டு மக்களை பரிதவிக்க விட்டு அவர்களின் தாய் நாடான இங்கிலாந்துக்கு ஓடி விட்டனர். அதனால் மலாயா மக்கள் எண்ணிலடங்க துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது.

இங்கு வாழ்ந்தவர்களுக்கு உண்ண உணவில்லை, வேலையில்லை, கல்வியில்லை, மருத்துவமில்லை, நாட்டில் சட்ட, ஒழுங்கில்லை உயிர் உடமைகளுக்கு பாதுகாப்பில்லை. ஆயிரக்கணக்கான மலாயா மக்கள் பசி, பட்டினியில், போரில், உடல் ஊனத்தில் நோயில் இறந்தனர்.

மலாயா மட்டுமின்றி, ஆசிய மக்கள் அந்நிய ஆட்சி எவ்வளவு போலியானது, பலவீனமானது என்பதை புரிந்து கொண்டனர். அதனால் ஒட்டுமொத்த ஆசியாவும் விடுதலையை நோக்கி புறப்பட்டது.

பல சரித்திர ஆராய்ச்சியாளர்களின் கருத்து. ஆனால் அதையும் தாண்டி சுமார் நூற்று முப்பது ஆண்டுகளுக்கு மேல் தனி மனித வெறுப்பில் ஆரம்பித்து பின் வளர்க போராட்டமாக வெடித்த தொழிலாளர் போராட்டங்களும் சுதந்திரத்தின் முக்கிய கூறாகும்..

சுதந்திர மலாயாவில் கல்வி, பொருளாதாரம், மக்கள் நல்வாழ்வு சுபிட்சத்தில் மட்டும் மேம்பாடு காணவில்லை. நாட்டின் எல்லைகளும் விஸ்தாரமானது. ஆம், 1963 ல் ஆண்டில் மலாயா, சபா, சரவாக் மற்றும் சிங்கப்பூருடன் சேர்ந்து மலேசியா பெரிய நாடானது.

ஆங்கிலேய ஆட்சியில், மலாயாவில் மக்களுக்கு முறையான கல்வி, வேலை வாய்ப்புகள், மருத்துவம், நீர், மின்சாரம் மட்டுமா இல்லை? மக்களிடையே ஒற்றுமையும் இல்லை. போதிய ஊதியமும் இல்லை.

மலேசியர்களிடையே இன வேற்றுமையை வளர்த்து, நீண்ட காலத்துக்கு இந்நாட்டு மக்களை சுரண்டி சுய பொருளாதார வளத்தை மேம்படுத்தி கொள்வதே பிரிட்டனின் நோக்கமாக இருந்தது.

ரப்பர் தோட்டங்களில் ஒரே தொழிலை மேற்கொண்டு வந்த மூன்று இனத்துக்கும் வெவ்வேறு விதமான கூலிகள் வழங்கி அவர்களிடையே வேற்றுமையை வளர்த்தனர் ஆங்கிலேயர்கள்.

**“மலேசியர்கள் கவனிக்க வேண்டியது, இந்த கால கட்டத்தில், ரப்பர் தொழிலின் வழி,பிரிட்டன் நல்ல வருமானம் பெற்று அதன் கடன்களை அடைத்தது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் நலனில் சற்றும் முன்னேற்றம் இல்லை.”**

தமிழ்ப்பள்ளிகள் அனைத்தும் தனியார் நிறுவனமான ரப்பர் தோட்டங்களுக்கும், சமய அமைப்புகளுக்கும் சொந்தமானதாக இருந்தது. பள்ளிக்கூட தேர்வுகள் முறையாக இல்லை. அதனால், ஒரே வகுப்பில் ஒரு மாணவன் பல ஆண்டுகள் படித்தார்.

இடைநிலைப் பள்ளிகள் அனைத்தும் தனியாருக்கு சொந்தமானது. மாணவர்கள் மாதக் கட்டணம் செலுத்தியே கல்வி கற்க வேண்டும். உயர் கல்விக்கு சிங்கப்பூர் அல்லது வெளிநாட்டுக்கு செல்ல வேண்டும். அதனால் கல்வி பணக்காரர்களுக்கு மட்டும் சொந்தமானது.

சுதந்திர மலேசியாவில் இப்பொழுது எல்லா தமிழ்ப்பள்ளிகளும் அரசாங்க உதவி பெற்றவை அல்லது அரசுக்கு சொந்தமானவை. தேர்வுகள் முறையாக நடைபெறுகிறது, இன்று, பட்டப்படிப்பு வரை இலவசம்.

## உயர் கல்விக்கு முதல் பல்கலைக்கழகம்

1960 ம் ஆண்டில் மலாயா பல்கலைக்கழகம் கோலாலம்பூரில் தோற்றுவிக்கப் பட்டது. இன்று நாட்டில் 20 பொது பல்கலைக்கழகங்களும், 47 தனியார் பல்கலைக்கழகங்களும் உண்டு.

**“பிரிட்டன் பினாங்கு தீவை 1786ல் பெற்றது (171 ஆண்டுகள்). மலாக்காவில் 1824ம் ஆண்டு காலடி எடுத்து வைத்தது, (133 ஆண்டுகள்). அதன் பொருளாதார அரசியல் ஆதிக்கத்தை விஸ்தரித்து சுமார் 130 ஆண்டுகளுக்கு மேல் இந்த நாட்டை ஆண்டது.”**

இந்நாடு இப்பொழுது 64 வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறது. ஆங்கிலேயர் ஆண்ட பாதி காலத்தில் 63 வருடங்களுக்குள் சுதந்திர மலேசியா 20 பொது பல்கலைக்கழகம், மற்றும் 47 தனியார் பல்கலைக்கழகங்களை பெற்றுள்ளது.

இன்று எல்லா பட்ட கல்வியையும் உள்நாட்டிலேயே கற்கலாம்.

முக்கியமாக திறமை இருந்தால், இலவசமாகவே பட்டக் கல்வியை முடிக்கலாம். இன்று திறமையானவர்களுக்கே கல்வி சொந்தம்.

ஆங்கிலேயர்கள் ஆட்சியில் இந்நாட்டில் ஒரு உயர்கல்விக்கூடம் (பல்கலைக்கழகத்தை) நிறுவ முடியவில்லையா? அவசியமில்லையா? இங்குள்ளவர்களை என்றும் கூலித் தொழிலாளர்களாகவே வைத்திருக்க வேண்டும் என்ற வேட்கையா? சுதந்திரத்தின் உன்னதத்தை உணர அன்றும் இன்றும் இந் நாட்டின் கல்வி , வளர்ச்சியை ஒப்பிட்டோம்.

## இன்றைய வாழ்வு, ஒரே நாளில் அடைந்த வெற்றியல்ல

இன்று நாம் வாழும் உன்னத வாழ்வு, ஒரே நாளில் அடைந்த வெற்றியல்ல, அதற்கு நமது பெற்றோர்களும், மூதாதையர்களும் பட்ட துன்பங்கள் நடத்திய போராட்டங்கள் செய்த உயிர் தியாகங்கள் எண்ணில் அடங்காது.

நாட்டின் ஆரம்பகால சரித்திரத்தை எழுதியவர்கள், ஆங்கிலேயர்கள் இந்நாட்டில் அதிகாரத்தை விஸ்தரிக்கும் பொழுது அங்காங்கே எழுந்த மலாய்க்காரர்களின் எதிர்ப்பை சுதந்திர போராட்டமாக சித்தரித்துள்ளனர்..

பிறகு சுதந்திரத்தை பற்றி எழுதியவர்கள் கூட சுமார் 30 ஆண்டுகளுக்கும் குறைவாக அரசியல் நடத்திய கட்சிகளையும், ஆயுத போராட்டங்களை நடத்திய அமைப்புகளையே நாட்டின் சுதந்திர போராட்ட அமைப்பாக எழுதி உள்ளனர்.

அதே ஆங்கிலேயர்களின் கோரபிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள 100 ஆண்டுகளுக்கு மேல் போராடிய தோட்ட தொழிலாளர் வர்கத்தினை கண்டுக்கொள்ளாதது ஏமாற்றமளிக்கிறது.

அவர்களின் செயல் முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்றது. சுமார் நூற்று முப்பது ஆண்டுகளுக்கு மேல் தனிமனித வெறுப்பாக ஆரம்பித்து பின் வர்க்க போராட்டமாக வெடித்த தொழிலாளர் போராட்டங்களை மறைத்து எழுதியுள்ளது தொழிலாளர்களை சிறுமை படுத்தும் செயல்.

## சுரண்டலுக்கும் கொடுமைகளுக்கும் இலக்கான தோட்ட தொழிலாளர்

ஆங்கிலேயர்களின் நேரடி சுரண்டலுக்கும் கொடுமைகளுக்கும் இலக்கான தோட்ட தொழிலாளர் போராட்டங்களை, தொழிலாளர் உரிமைக்கு போராடிய குழுக்களை மறந்ததும், ஆங்கிலேயர்களின் சில்லறைகளுக்கு மயங்கிப் போனவர்களின் எழுத்தாகவே அவர் வடித்த புத்தகங்களை கருத வேண்டும்.

தொழிற்சங்கங்களின் உதயம், தொழிலாளர்களின் போராட்டத்தை தோட்ட நிர்வாகங்களை எதிர்த்த ஒன்றாக மட்டும் பார்க்காமல், இந்நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு, அவர்களே எழுப்பிய குரல் விட்ட ஏக்க பெருமூச்சி என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தொழிற் சங்கங்களின் தேசிய நிலை வேலை நிறுத்தங்களுக்கு, கம்யூனிஸ் போராட்டவாதிகள் வழங்கிய ஆதரவு, ஒரு பொது எதிரியை எதிர்க்க இந்நாட்டு மக்கள் ஒன்றுபட்டுள்ளதாகவே கருத வேண்டும்.

ஆங்கிலேயர்கள் நம் நாட்டு மக்களிடையே நீண்ட காலமாக வேற்றுமையை வளர்த்து வந்தனர். இந்நாட்டில் இன பாகுபாடுக்கு அடித்தளமிட்டதே அவர்கள்தான். அவர்கள் இந்நாட்டை தங்கள் கைக்குள் வைத்துக் கொள்ள, நாட்டை சுரண்ட குறிப்பாக தொழிலாளர்களை சுரண்ட கையாண்ட கைங்காரியம் அது.

இந்திய தோட்டப் பாட்டாளிகளுக்கு ஊதியத்தில் சக சீன தொழிலாளர்களுக்கு கொடுக்கப் படுவதை விட மிக குறைவாக ஊதியம் வழங்கினர். தோட்டத் தொழிலாளர்கள் வாரம் 7 நாட்களும், ஒவ்வொரு நாளும் 12 மணி நேரங்களுக்கு மேல் வேலை செய்ய வேண்டும்.

இது போன்றே மற்ற விவகாரங்களிலும் பாகுபாடுகள், வேறுபாடுகளின் பட்டியல் நீண்டன. இதை தட்டிக் கேட்கவே தொழிற்சங்கங்களை தொழிலாளர்கள் அமைத்தனர் .

**“மார்ச் 1946ல் இந்திய தோட்டத் தொழிலாளிக்கு ஆண் 65 காசு பெண் 55 காசும் சம்பளம் கொடுக்கப்பட்டது. அதே வேளையில் சீன ஆண் தொழிலாளருக்கு $2 முதல் $3.50 வரை நாள் ஊதியம் கொடுக்கப்பட்டது. பல போராட்டங்களுக்குப் பின், பல உயிர் இழப்புக்கு பின் தொழிற்சங்கம் மூலம் இந்திய தொழிலாளி ஆண்களுக்கு $1.10 பெண்களுக்கு 95 காசு ஊதிய கோரிக்கையை வைத்தது. ஆனால் ஆங்கில முதலாளிகளை எதிர்த்து அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முதுகெழும்பின்றி வாளாருந்துள்ளது அன்றைய தொழிலாளர் துறை இலாக்கா.”**

## தோட்ட தொழிலாளர்களை பட்டினிப் போட்டனர் ஆங்கில துரைமார்கள்

தோட்ட தொழிலாளர்கள், தொழில் சங்கங்கங்களின் நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்படும் போது, அது வேலை நிறுத்தமாக உருவெடுப்பது, அதை ஒடுக்க தோட்டத் தொழிலாளர்களுக்கு குடிநீர், மற்றும் உணவு பொருட்களின் விநியோகிப்பதை தோட்டத்து எல்லைக்குள் அனுமதிக்காமல் தோட்ட தொழிலாளர்களை பட்டினிப் போட்டனர் ஆங்கில துரைமார்கள்.

சக தொழிலாளர்களுக்கு உதவ பக்கத்து தோட்ட மக்கள் முயன்றால் அவர்களை ஆங்கில காலனித்துவ அரசின் போலீசார் ஒடுக்குவது கைது செய்வது மட்டுமின்றி. பலர் பல இடங்களில் உயிரிழக்கவும் காரணமாக இருந்தது.

இப்படிப்பட்ட சம்பவங்களால், வேலை ,நிறுத்தங்களில் நாடு முழுவதிலும் பல தொழிலாளர்கள் உயிரிழந்தப் பின் நாளுக்கு 5 காசுகள் ஊதிய உயர்வு வழங்கிய ஆங்கில தோட்ட நிர்வாகங்கள் எவ்வளவு கொடுமையானதாக இருந்திருக்கும், இந்நாட்டு தொழிலாளர் இலாக்கா எப்படிப்பட்டது என்பதை வாசகர்கள் புரிந்துக்கொள்ளலாம்.

அப்படிப்பட்ட கொடுமையான சூழலில் வாழும் மக்களுக்கு விடுதலையைத் தவிர வேறு என்ன வேண்டும்? ஆங்கிலேயர்கள் அவர்களின் சொந்த நாட்டை மேம்படுத்த, இரண்டாம் உலக போரில் அவர்கள் ஐரோப்பிய கண்டத்தில் இழந்ததை ஈடுகட்ட மலேசிய ரப்பர் தோட்டங்களை , தோட்டத் தொழிலாளர்களை முற்றாக சுரண்டினர். அதனால் இந்நாட்டு மக்களின் வலுவான எதிர்ப்பை பெற்றனர்.

இன்றைய சுதந்திர மலேசியாவில் அடிப்படை சம்பளம் 1100 வெள்ளி, வாரம் 5 முதல் 6 நாட்களே வேலை, அதுவும் 8 மணி நேரம், வேலையிடத்தில் எண்ணற்ற சலுகைகள், எக்காரணத்துக்கும் எந்த தொழிலாளருக்கும், குடிநீரும் உணவும் மறுக்க முடியாது.

தினம் 5 காசு ஊதிய உயர்வுக்கு உயிர் தியாகம் செய்து எவரும் போராடுவதில்லை. இதுவே, மிக எளிதாக புரிந்து கொள்ள வேண்டிய சுதந்திரத்தின் மேன்மை

## நாகப்பன் வடிவேலு முன்னால் உலு சிலாங்கூர் மேரி தோட்ட தொழிற்சங்க கமிட்டி



நமக்கு விடுதலை இன்னும் வந்து சேரவில்லை என்கிறார்.

முதலாளிகள் என்றும் முதலாளிகளே முன்னால் பிரதமர் துன் ராசாக் காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் உணவு தேவைகளை பூர்த்தி செய்ய வீட்டிற்கு 1\2 ஏக்கர் நிலம் (பச்சை புத்தகத்திட்டம்) என்ன ஆனது? அல்லது அவர்கள் கொண்டு வந்த தொழிலாளர்கள் வீட்டுடமைத் திட்டம் நிறைவேறியதா? எத்தனை தோட்டத்தில்? என கேட்கிறார் நாகப்பன் வடிவேலு. முன்பு எங்கள் தோட்டத்துக்கு பொது பஸ் சேவை இருந்தது. இப்பொழுது அதுக்கு கூட வழி இல்லை என்கிறார்.


# 12 வயதுக்கும் கீழ்ப்பட்டவர்களுக்கு தடுப்பூசி

## அரசாங்கம் இன்னும் முடிவெடுக்கவில்லை



புத்ரா ஜெயா – பன்னிரண்டு வயதுக்கும் கீழ்ப்பட்ட சிறார்களுக்கு கோவிட்-19 தடுப்பூசியைச் செலுத்துவது குறித்து அரசாங்கம் இன்னும் முடிவெடுக்கவில்லை என்று சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் கூறினார். சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான அனுமதி மலேசியாவிலும் இதர பகுதிகளிலும் இதுவரை வழங்கப்படவில்லை. இவ்விவகாரம் மீது எஃப்.டி.ஏ. எனப்படும் மருந்து மற்றும் உணவு நிர்வாக அமைப்பு, தேசிய சுகாதார கட்டுப்பாட்டு அமலாக்கத் தரப்பு போன்றவை இன்னும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றன என்று அவர் சொன்னார். சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்துவது பாதுகாப்பானது என்பதை நிரூபிக்கும் தரவுகள் நமக்கு கிடைக்கும் பட்சத்தில் அத்திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஏதுவாக இவ்விவகாரத்தை தடுப்பூசி செயல்குழுவின் கவனத்திற்கு கொண்டுச் செல்வோம் என்றார் அவர். கோவிட்-19 நோய்த் தொற்றின் ஆகக்கடைசி நிலவரங்கள் தொடர்பில் நேற்று இங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். சிறார்களுக்காக பிரத்தியேகமாக தடுப்பூசியைத் தயாரிக்கும் பணியில் பைசர் பயோஎன்டேக் நிறுவனம் தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் அந்த தடுப்பூசி பெரியவர்களுக்கு வழங்கப்படுவதைக் காட்டிலும் மாறுபட்ட மருந்தளவைக் கொண்டிருக்கும் என்றும் அவர் கூறினார். பன்னிரண்டு வயதுக்கும் கீழ்ப்பட்ட சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு இன்னும் அனுமதி கிடைக்காத காரணத்தால், பள்ளிகளில் உள்ள பெரியவர்கள் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுள்ளதை உறுதி செய்வதன் மூலம் மட்டுமே மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்றார் அவர்.

# பள்ளிகளைத் திறப்பதற்கு முன்னர் மாணவர்களின் நோய்த் தொற்று அபாயம் மீது மதிப்பீடு தேவை



ஷா ஆலம் – மாணவர்கள் கோவிட்-19 நோய்த் தொற்று அபாயத்திற்குள்ளாவதை தவிர்ப்பதற்கு ஏதுவாக வரும் அக்டோபர் மாதம் பள்ளிகளைத் திறப்பதற்கு செய்யப்பட்டுள்ள முடிவை மறு ஆய்வு செய்யும்படி அரசாங்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் தடுப்பூசி பெறாத சிறார்கள் மத்தியில் நோய்த் தொற்று அதிகரித்து வருவதை நாம் ஒரு படிப்பினையாக்க் கொள்ள வேண்டும் என்று சிலாங்கூர் மாநில கோவிட்-19 தடுப்பூ சிறப்பு பணிக்குழுவின் இயக்குநர் டாக்டர் முகமது ஃபர்ஹான் ருஸ்லி கூறினார்.

மூன்றாம் மற்றும் நான்காம் கட்டத்தை எட்டிய கோவிட்-19 நோயாளிகளில் பெரும்பாலோர் மிகவும் அபாயக் கட்டத்தை எட்டியவர்களாக கருதப்படுகின்றனர். அவர்களின் இடத்தை சிறார்கள் நிரப்பி விடக்கூடாது என நாங்கள் கருதுகிறோம் என்றர் அவர்.

அக்டோபர் மாதம் பள்ளிகளைத் திறப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முடிவு சரியானதா? என மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. எந்தவொரு துறையையும் திறப்பதாக இருந்தாலும் அது குறித்து விரிவான ஆய்வை முன்னதாக நடத்துவது அவசியமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

தேசிய மீட்சித் திட்டத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தை எட்டிய மாநிலங்களில் வரும் அக்டோபர் மாதம் 3ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று கல்விமையச்சர் டத்தோ டாக்டர் ராட்ஸி ஜிடின் கடந்த மாதம் 15 ஆம் தேதி கூறியிருந்தார்.

# 465 மாற்றுத் திறனாளிகளுக்கு வெ. 500 நிதியுதவி



ஷா ஆலம் - சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 465 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 500 வெள்ளி உதவித் தொகையை யாவாஸ் அறவாரியம் இதுவரை வழங்கியுள்ளது.

கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் தொகுப்பின் கீழ் அமல்படுத்தப்பட்ட இத்திட்டத்திற்காக இதுவரை 235,500 வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளதாக சிலாங்கூர் பிரத்தியேக சிறார் கல்வி துறையின் (அனிஸ்) தலைவர் டேனியல் அல்-ரஷிட் ஹருண் கூறினார். கடந்த ஜூலை மாதம் முதல் இந்த உதவி நிதி வழங்கப்பட்டு வருவதாக சிலாங்கூர் கினிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் நோக்கில் இத்திட்டத்திற்கு மாநில அரசு 600,000 வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 232,500 வெள்ளி அதாவது அந்நிதியில் 38 விழுக்காடு தகுதி உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது என்றார் அவர்.

இதர விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய அவர், தகுதி உள்ளவர்களுக்கு ஒவ்வொரு திங்கள்கிழமையும் கட்டங் கட்டமாக நிதி வழங்கப்படும் என்றார்.

இந்த உதவித் திட்டத்தின் வழி 1,200 பேருக்கு மட்டுமே உதவி வழங்க மாநில அரசு இலக்கு நிர்ணயித்திருந்த நிலையில் கடந்த ஜூலை முதல் தேதி தொடங்கி இதுவரை 7,000 விண்ணப்பங்களை நாங்கள் பெற்றுள்ளோம். இத்திட்டத்திற்கு சிறப்பான வரவேற்பு கிடைத்துள்ளதை இது காட்டுகிறது என்றார் அவர்.

# சிலாங்கூர் பரிவு விவசாயத் திட்டத்தின் கீழ் விளைபொருள் விற்பனை மையங்கள் அமைக்கப்படும்



ஷா ஆலம் – சமூக வேளாண் தோட்டங்களுக்கு அருகில் விளைபொருள் விற்பனை மையங்களை அமைப்பதன் வாயிலாக சிலாங்கூர் பரிவு விவசாயத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டு கழகம் கூறியது.

இங்குள்ள செக்சன் 7, சமூக வேளாண் தோட்டத்தில் உள்ள விளைபொருள் விற்பனை மையம் இதற்கான முன்னோடித் திட்டமாக அமைந்துள்ளது என்று அக்கழகத்தின் சந்தை மேம்பாட்டுப் பிரிவு தலைமை நிர்வாகி முகமது ஃபாசீர் அப்துல் லத்திப் கூறினார்.

இந்த விற்பனை மையம் கடந்த மாதம் தொடங்கி ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் செயல்பட்டு வருவதாக அவர் சொன்னார்.

இந்த சமூக வேளாண் தோட்ட விற்பனை மையங்களை பூச்சோங், செலாயாங் மற்றும் புத்ரா ஜெயாவில் திறப்பதற்கு தாங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாக கூறிய அவர், எனினும் அதன் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றார்.

இத்தகைய விற்பனை மையங்களை அதிகளவில் திறப்பதன் வழி பொதுமக்கள் குறைந்த விலையில் புதிய விளைபொருள்களை வாங்குவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்றார் அவர்.

இந்த விற்பனை மையங்களில் சமூக வேளாண் தோட்டங்களில் விளையும் உற்பத்தி பொருள்கள் மட்டுமின்றி ரவாங்கில் உள்ள சிலாங்கூர் ஃப்ருட் வேலியின் விளைபொருள்களும் இடம் பெற்றிருக்கும் என அவர் தெரிவித்தார்.

# உணவு கூடைகளின் விநியோகம் டாக்சி, வேன் மற்றும் பள்ளி பேருந்து, திடக்கழிவு லாரிகளின் ஓட்டுநர்களுக்கும் மற்றும் ஓராங் அசாலுக்கும் பயனளித்தது




ஷா ஆலம் : தொற்றுநோயால் வருமானம் பாதிக்கப்பட்ட மாநிலம் முழுவதும் மொத்தம் 5,529 டாக்சி, வேன் மற்றும் பள்ளி பேருந்து ஓட்டுநர்கள் உணவு உதவி பெற்றனர்.

பொது போக்குவரத்து ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான், இந்த ஆண்டு ஜனவரி முதல் விநியோகிக்கப்பட்ட RM100 மதிப்புள்ள உதவி மொத்த RM553,900 ஒதுக்கீட்டை உள்ளடக்கியது என்று கூறினார்.

“உணவு கூடைகளின் விநியோகம் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து சிலாங்கூர் வீட்டுவசதி மற்றும் சொத்து வாரியத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட மலேசியாவின் யயாசன் உணவு வங்கி மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

“எதிர்காலத்தில் எந்தவொரு குழுவும் எந்தவிதமான உதவிகளிலும் பின்தங்கிவிடாமல் இருப்பதை மாநில அரசு உறுதி செய்யும், இதனால் மக்கள் உயிர்வாழ்வதற்காக அதை அனுபவிக்க முடியும்,” என்று அவர் கூறினார்.

சிலாங்கூர் மாநில சட்டசபை கூட்டத்தில் டாக்ஸி, வேன் மற்றும் பஸ் டிரைவர்கள் நலன் குறித்து கோத்தா அங்கெரிக் மாநில சட்டமன்ற உறுப்பினர் முகமட் நஜ்வான் ஹலிமியின் வாய்மொழி கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

உணவு கூடை முயற்சி கித்தா சிலாங்கூர் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது, இது ரூமா ராயாட் மக்கள் வீட்டுத் திட்டங்களின் குடியிருப்பாளர்கள், KDEBWM என்னும் திடகழிவு பணியாளர்கள் , திடக்கழிவு லாரிகளின் ஓட்டுநர்களுக்கும் மற்றும் ஓராங் அசால் போன்ற பிரிவினர் பயனடைந்துள்ளனர்.

இந்த உதவி மீண்டும் கடந்த ஜூன் மாதம் கித்தா சிலாங்கூர் 2.0 தொகுப்பு மூலமும் வழங்கப்பட்டது அதில் தனித்துவாழும் தாய்மார்கள், உடல் குறைபாடுகள் உள்ளவர்கள் மற்றும் கோவிட்-19 நோயாளிகளும் பயனடையும் வண்ணம் நீட்டிக்கப்பட்டது.

# 2021 வேலை வாய்ப்பு சந்தையை

## மாநில அரசு தொடரும் ஆட்சிக்குழு உறுப்பினர் தகவல்

ஷா ஆலம் – வேலை வாய்ப்புச் சந்தை திட்டத்தை இவ்வாண்டில் தொடர்வதில் சிலாங்கூர் அரசு உறுதியாக உள்ளது.

மாநிலத்தில் தற்போது 4.5 விழுக்காடாக இருக்கும் வேலையில்லாதோர் எண்ணிக்கையை 2.5 விழுக்காடாக குறைக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இளையோர் தலைமுறையினர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது கைருடின் ஒத்மான் கூறினார்.

தேசிய மீட்சித் திட்டத்திற்கான நிபந்தனைகள் தளர்த்தப்படும் பட்சத்தில் பெட்டாலிங், கிள்ளான், சபாக் பெர்ணம், உலு சிலாங்கூர், சிப்பாங் ஆகிய மாவட்டங்களை இலக்காகக் கொண்டு இந்த வேலை வாய்ப்புச் சந்தை இவ்வாண்டில் தொடரப்படும் எனறு அவர் சொன்னார்.

இளையோர் மத்தியில் காணப்படும் வேலையில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் முனைப்பு காட்டும்படி மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார் அவர். இறைவன் அருளால் தேசிய மீட்சித் திட்டத்திற்கான நிபந்தனைகள் தளர்த்தப்படும் பட்சத்தில் இத்தகைய வேலை வாய்ப்புச் சந்தைகளை நாம் நேரடியாக நடத்த இயலும். அவ்வாறு நடத்தப்படுவதற்கு சாத்தியம் இல்லாவிடில் தேசிய பாதுகாப்பு மன்றத்தின் அனுமதியுடன் முதலாளிகளை ஓரிடத்தில் கூட்டி இயங்கலை வாயிலாக வேலை வாய்ப்பு சந்தையை நடத்துவதற்கான சாத்தியம் ஆராயப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் வேலையில்லாதோர் எண்ணிக்கை தற்போது 4.5 விழுக்காடாக உள்ளது. அதனை பழையபடி 2.5 விழுக்காடாக குறைக்க விரும்புகிறோம் என்று இளையோருக்கு உதவும் கடப்பாடு எனும் தலைப்பிலான விவாத நிகழ்வில் பேசிய போது அவர் தெரிவித்தார்.

கடந்த 23 ஆம் தேதி சட்டமன்றக் கூட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றிய மேன்மை தங்கிய சுல்தான் கடந்த 2019இல் 3.9 விழுக்காடாக இருந்த வேலையில்லா திண்டாட்டம் கடந்தாண்டில் 4.9 விழுக்காடாக அதிகரித்துள்ளது என்றார்.



இவ்வாண்டு தொடக்கத்தில் மாநிலத்தில் பொருளாதாரம் சற்று மீட்சி கண்ட போதிலும் கடந்த ஜூன் மாதவாக்கில் வேலையில்லாதோர் எண்ணிக்கை 40,600 ஆக உயர்ந்து 4.8 விழுக்காட்டை எட்டியதாக அவர் குறிப்பிட்டார்.

# கித்தா சிலாங்கூர் திட்டத்தின் வழி 871,837 பேர் பயன் பெற்றனர்

ஷா ஆலம் – கித்தா சிலாங்கூர் உதவித் தொகுப்பின் வழி இம்மாதம் 16 ஆம் தேதி வரை 871,837 குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் பயனடைந்துள்ளனர். கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக வருமானம் பாதிக்கப்பட்ட இத்தரப்பினருக்கு உதவுவதற்காக இந்த கித்தா சிலாங்கூர் திட்டத்தின் வழி 27 கோடியே 83 லட்சத்து 40 ஆயிரம் வெள்ளி செலவிடப்பட்டுள்ளதாக புறநகர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் பெர்ஹான் அமான் ஷா கூறினார்.

கித்தா சிலாங்கூர் 1.0 திட்டத்தின் வாயிலாக 4 கோடியே 17 லட்சம் வெள்ளியும் கித்தா சிலாங்கூர் 2.0 திட்டத்தின் வாயிலாக 23 கோடியே 66 லட்சத்து 30 ஆயிரம் வெள்ளியும் செலவிடப்பட்டதாக அவர் சொன்னார். கித்தா சிலாங்கூர் உதவித் தொகுப்பின் கீழ் அறிவிக்கப்பட்ட 46 திட்டங்களில் 11 திட்டங்கள் முழுமையடைந்து விட்டன. சிரமத்தில் இருக்கும் மக்களை இலக்காக கொண்டு இத்திட்டங்கள் அமல்படுத்தப்பட்டன என்றார் அவர்.

சட்டமன்றத்தில் இன்று கோவிட்-19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் மற்றும் உதவித் திட்டங்களின் வாயிலாக பயனடைந்தவர்கள் எண்ணிக்கை குறித்து சுங்கை ஆயர் தாவார் சட்டமன்ற உறுப்பினர் டத்தோ ரிசாம் இஸ்மாயில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

உணவுக் கூடைகளுக்கு பதிலாக ரொக்கத் தொகையை வழங்குவதற்கான சாத்தியம் உள்ளதா என்ற கேள்விக்கு, இவ்விவகாரம் மீது மாநில அரசு விரிவான ஆய்வினை மேற்கொள்ளும் என்று அவர் பதிலளித்தார்

.ரொக்கமாக வழங்கப்படும் உதவித் தொகை கைதவறி காணாமல் போவது, அத்தியாவசியப் பொருள்களுக்கு அல்லாமல் வேறு நோக்கங்களுக்கு செலவிடுவது போன்ற பிரச்னைகள் எழுவதற்குரிய சாத்தியத்தையும் ஏற்படுத்தும் என்றார் அவர்.

# பி.ஜே.டி. லிங்க் நெடுஞ்சாலைத் திட்டம்
## மாநில அரசின் நிபந்தனை பின்பற்றப்பட வேண்டும்



ஷா ஆலம் – பி.ஜே.டி. லிங்க் எனப்படும் பெட்டாலிங் ஜெயா டிஸ்பெர்சல் லிங்க் நெடுஞ்சாலைத் திட்டத்தை தொடங்குவதற்கு முன்னர் சிலாங்கூர் அரசு நிர்ணயித்துள்ள நிபந்தனைகளை ஒப்பந்த நிறுவனம் பூர்த்தி செய்ய வேண்டும். வீடமைப்புப் பகுதிகளின் ஊடே செல்லும் இத்திட்டத்திற்கு நில மீட்பு மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு போன்ற பிரச்னைகள் எழுவதை தவிர்ப்பதற்கு இந்நடவடிக்கை அவசியமாகிறது என்று அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

இந்த நெடுஞ்சாலைத் திட்டம் தொடர்பில் மத்திய அரசுக்கும் அத்திட்டத்தை மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள நிறுவனத்திற்கும் இடையே இன்னும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த உத்தேச திட்டத்தில் பாதிக்கப்படும் மக்களுடன் சந்திப்பு நடத்துவது உள்பட சுற்றுச்சூழல் இடர் மதிப்பீடு மற்றும் சமூக இடர் மதிப்பீடு ஆகிய அம்சங்கள் மீதும் அந்நிறுவனம் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

மாநில சட்டமன்றத்தில் இன்று பி.ஜே.டி. லிங்க் நெடுஞ்சாலைத் திட்டத்தின் ஆகக் கடைசி நிலவரம் குறித்து புக்கிட் காசிங் சட்டமன்ற உறுப்பினர் ஆர். ராஜீவ் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நெடுஞ்சாலைத் திட்ட அமலாக்கத்தை ஒருங்கிணைப்பது தொடர்பில் பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றத்துடன் பேச்சு நடத்தும்படி மலேசிய நெடுஞ்சாலை வாரியத்தை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

# பிரச்னைகள் எழுவதைத் தவிர்க்க அனுமதி பெற்று ஆலயம் கட்டுங்கள்

ஷா ஆலம் – வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்க விரும்பும் தரப்பினர் அதற்கான அனுமதியை ஊராட்சி மன்றங்களிடமிருந்து முறையாகப் பெற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கையின் வழி தேவையற்ற பிரச்னைகள் எதிர்காலத்தில் எழுவதை தவிர்க்க முடியும் என்று லீமாஸ் எனப்படும் பெளத்த, கிறிஸ்துவ, இந்து, சீக்கிய மற்றும் தோ சமய சிறப்பு செயல்குழுவின் இணைத் தலைவர் வீ.கணபதி ராவ் கூறினார்.

சட்டவிரோதமாக ஆலயங்கள் கட்டப்படும் பட்சத்தில் அவற்றை உடைப்பது உள்ளிட்ட கடும் நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இதனால் மேலும் கடுமையான சிக்கல்கள் உண்டாகும் என்று சமூக நலன், தொழிலாளர் மற்றும் பரிவுமிக்க அரசாங்கத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினருமான அவர் தெரிவித்தார்.

ஆலயங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் அதன் திட்டமிடல் தொடர்பாக விண்ணப்பம் செய்வது கட்டாய நிபந்தனையாகும் எனக் கூறிய அவர், இது நீண்டகால அடிப்படையில் உத்தரவாதம் அளிக்கக் கூடியது என்பதால் ஊராட்சி மன்றங்களின் நிபந்தனைகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றார்.

அங்கீகாரம் பெற்ற ஆலயங்களை அரசாங்க பதிவேட்டில் இடம் பெறச் செய்ய முடியும்.

மாநில அரசு இதுவரை சுமார் 300 ஆலயங்களை ஆர்ஜிதம் செய்துள்ளது என்று மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

# 305 வர்த்தகமையங்களில் எம்.பி.கே. சோதனை
## 86 குற்றப்பதிவுகள் வெளியீடு

ஷா ஆலம் – கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது உரிய அனுமதியின்றி வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றத்திற்காக 86 வர்த்தக மையங்களுக்கு கிள்ளான் நகராண்மைக் கழகம் அபராதம் விதித்தது.

அக்காலக்கட்டத்தில் 305 வர்த்தக மையங்கள் மீது சோதனை மேற்கொள்ளப்பட்டதாக கிள்ளான் நகராண்மைக் கழகத்தின் அமலாக்கப் பிரிவின் துணை இயக்குநர் ஷாருள் ஹஸ்ரி அப்துல் மஜிட் கூறினார்.

இந்த சோதனை நடவடிக்கைகளில் 282 அமலாக்க அதிகாரிகள் ஈடுபட்டதாக கூறிய அவர், சட்டத்திற்கு புறம்பாகச் செயல்படுவோர் விஷயத்தில் தமது தரப்பு விட்டுக் கொடுக்கும் போக்கை கடைபிடிக்காது என்பதற்கு இது சான்றாகும் என்றார்.

ஜாலான் மேரு, ஜாலான் பாசார் பாரு 3 ஆஃப் ஜாலான் மேருவில் உள்ள பி.கே.என்.எஸ். வியாபார தொகுதியில் லைசென்ஸ் இன்றி செயல்பட்ட குற்றத்திற்காக இருவர் கடைகளில் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தவிர, கிள்ளான் ஜாலான் பிஸ்தாரியில் உள்ள பிட்காயின் மையம் ஒன்றில் சோதனை மேற்கொள்வதில் கிள்ளான் மாவட்ட போலீசார் மற்றும் தெனாகா நேஷனல் நிறுவனத்திற்கு தமது தரப்பு உதவி புரிந்த தாக அவர் மேலும் சொன்னார்.



# மாணவர்களின் ஏற்றமிகு வாழ்வுக்கு ஏணிப்படி

# எமரால்டு தமிழ்ப்பள்ளி



கிள்ளான், புக்கிட் கெமுனிங் சாலையின் 8 வது மைலில் உள்ள எமரால்டு தோட்டத்தில் கடந்த 1925 ஆம் ஆண்டு இருபது மாணவர்களுடன் தொடங்கியது எமரால்டுப்பள்ளி.

நான்கு பக்கமும் சுவர்கள் இன்றி மண் தரை கொண்ட அத்தாப்புக் கொட்டகையில் உருவெடுத்த இப்பள்ளி ஒரு நூற்றாண்டைக் கடக்கும் தருணத்தில் மூன்று கட்டிங்கள், 20 வகுப்பறைகள், மிகப்பெரிய பல்நோக்கு மண்டபம் என பல்வேறு வசதிகளுடன் ரம்மியத் தோற்றத்தில் காட்சியளிக்கிறது.

அன்றைய எமரால்டு தோட்டம் கெமுனிங் உத்தாமா என்ற நவீன குடியிருப்பு பகுதியாக உருமாற்றம் கண்ட நிலையில் அதற்கேற்றவாறு இப்பள்ளியும் தன்னை புதுப்பித்துக் கொண்டு புதுத் தோற்றத்தைப் பெற்றுள்ளது.

சாதாரண அத்தாப்பு கொட்டையாக இருந்த இப்பள்ளி எப்படி படிப்படியாக பரிணாம வளர்ச்சி கண்டது என்பதை வரலாற்றுச் சான்றுகள் நமக்கு தெளிவாக விளக்குகின்றன. இந்த பள்ளியின் வரலாறு மற்றும் அதன் ஆகக்கடைசி மேம்பாடுகள் குறித்து சிலாங்கூர் இன்று பத்திரிகைக்கு விவரிக்கிறார் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் கி. தயாளன். பள்ளி ஆரம்பிக்கப்பட்டு சுமார் 22 ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது 1947 ஆம் ஆண்டில் இப்பள்ளி சிமெண்ட் தரை கொண்ட கட்டிடமாகக் தரம் உயர்த்தப்பட்டது. தொடக்கத்தில் இப்பள்ளியில் முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்புகள் மட்டுமே செயல்பட்டு வந்தன. பள்ளிக்கு பின்புறம் பள்ளித் தலைமையாசிரியர் வீடு இருந்தது. மூன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை பயில்வதற்கு மாணவர்கள் இங்கிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் இருந்த புக்கிட் கெமுனிங் தோட்டத்திற்கு (தற்போது கோத்தா கெமுனிங்) செல்ல வேண்டும். எண்பதாம் ஆண்டுகளில் புக்கிட் கெமுனிங் தோட்டம் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்த புக்கிட் கெமுனிங் தோட்டத் தமிழ்ப்பள்ளி மூடப்பட்டு மாணவர்கள் எமரால்டு தமிழ்ப்பள்ளிக்கு மாற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இப்பள்ளி முழுமையாக அனைத்து வகுப்புகளையும் கொண்ட பள்ளியாக செயல்படத் தொடங்கியது.

அதன் பின்னர் இப்பள்ளிக்கு பொறுப்பேற்ற பல தலைமையாசிரியர்கள் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வுக்கேற்ப பள்ளியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் முயற்சியில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து மேற்கொண்டனர். அந்த முயற்சியின் பலனாக கடந்த 1986 ஆம் ஆண்டில் முதன் முறையாக நீர் மற்றும் மின்சார விநியோகம் கிடைக்கப் பெற்றது என்று தயாளன் குறிப்பிட்டார்.

அது வரை சிற்றுண்டிச் சாலை இன்றி செயல்பட்ட இப்பள்ளிக்கு 1987 ஆம் ஆண்டில்தான் முதன் முறையாக சிற்றுண்டிச் சாலை கட்டப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் வகுப்பறைகளின் எண்ணிக்கையும் 12 ஆக அதிகரிக்கப்பட்டது.

இரண்டாயிரமாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சுற்றுவட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் காரணமாக இப்பள்ளி வெள்ளப் பிரச்னையை தொடர்ச்சியாக எதிர்நோக்கி வந்தது. இதனிடையே எமரால்டு தோட்டத்தில் மேம்பாட்டுப் பணிகளும் தொடங்கிய நிலையில் இப்பள்ளி நிராதரவான நிலைக்குத் தள்ளப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் முயற்சியால் மேம்பாட்டு நிறுவனமான பாரமாவுண்ட் டெவலப்மெண்ட் ஒத்துழைப்போடு பள்ளிக்கு அருகில் 2.65 ஹெக்டர் நிலப் பரப்பில் 28 லட்சத்து 48,000 ஆயிரம் வெள்ளி செலவில் இரு கட்டிடங்களைக் கொண்ட புதிய பள்ளி நிர்மாணிக்கும் பணி 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது 2008 ஆம் ஆண்டில் இப்பள்ளி புதிய கட்டிடத்தில் செயல்படத் தொடங்கியது. புதிய கட்டடம் கட்டப்பட்டப் பின்னரும் பள்ளியில் வகுப்பறை பற்றாக்குறை ஏற்பட்டது. வகுப்பறை பற்றாக்குறையைப் போக்க, 2009 ஆம் ஆண்டில் பள்ளி மேலாளர் வாரியத் தலைவர் டத்தோஸ்ரீ எஸ். ஆறுமுகம் முயற்சியால் கொடை நெஞ்சர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட இணைக்கட்டிடம் இரண்டு லட்சம் வெள்ளி செலவில் நிர்மாணிக்கப்பட்டது என்று தயாளன் விவரித்தார்.

பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் பள்ளி மேலாளர் வாரியத்தின் முயற்சியால் இப்பள்ளியில் சுமார் ஏழு லட்சம் வெள்ளி செலவில் பிருமாண்ட அளவில் மண்டம் ஒன்று கட்டப்பட்டத் தகவலையும் அவர் வெளியிட்டார்.

சபை கூடல் மற்றும் புறப்பாட நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களை வெயில், மழை போன்ற இயற்கை பாதிப்புகளிலிருந்து காக்கும் அதே வேளையில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானம் ஈட்டவும் இந்த மண்டபம் பேருதவி புரிகிறது.

இப்பள்ளி தற்போது 660 மாணவர்கள் மற்றும் 35 ஆசிரியர்களுடன் மிகச் சிறப்பாக செயல்படுகிறது. மேலும் 20 வகுப்பறைகள், கணினி அறை, நூலகம், அறிவியல் கூடம், பாலர் பள்ளி போன்ற வசதிகளும் உள்ளன.

பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி என்.கோகிலவாணி பள்ளி ஆசிரியர்கள், வாரியத் தலைவர் டத்தோஸ்ரீ எஸ்.ஆறுமுகம் தலைமையிலான பள்ளி மேலாளர் வாரியம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகிய தரப்பினருக்கிடையே காணப்படும் அணுக்கமான ஒத்துழைப்பு காரணமாக இப்பள்ளி கல்வி மற்றும் புறப்பாட நடவடிக்கைகளில் மட்டுமின்றி அடிப்படை வசதிகளிலும் சிறந்து விளங்குவதாக தயாளன் குறிப்பிட்டார்.

## எமரால்டு மாணவர்களின் சாதனைகள்

• யு.பி.எஸ்.ஆர். தேர்வுகளில் 75 விழுக்காட்டிற்கும் மேல் தேர்ச்சி விகிதத்தை பதிவு செய்து வரும் இப்பள்ளி, கடந்த 2019ஆம் ஆண்டில் 83.5 விழுக்காடு தேர்ச்சி விகிதத்தை பெற்று சிலாங்கூர் மாநில அளவில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றது.

• மலேசிய சைவ சமயப் பேரவை ஏற்பாட்டில் நடைபெற்ற திருமுறை பெருவிழாவில் தே. நிவர்தன் சக்தி, டி. சண்முகப்பிரியா, எஸ். சிவாம்பிகை, பி. கார்த்திகா, த. திவ்யா ஆகியோர் பரிசு வென்றனர்

• பிரதமர் ஒற்றுமை கிண்ணத்திற்கான சிலாங்கூர் மாநில தமிழ்ப்பள்ளிகள் நிலையிலான மலாய் சொற்பொழிவு போட்டியில் த.திவ்யா பரிசு வென்றார்.

• மலேசிய கல்வியமைச்சின் ஆதரவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் எஸ். சிவாம்பிகை பி. கீர்த்திகா வெற்றி பெற்றனர்.

• 2021 ஆம் ஆண்டிற்கான வளரும் நட்சத்திர போட்டியின் ஓவியப் பிரிவில் ஷிவானி முதல் பரிசையும் கீர்த்திகா ரெட்டி இரண்டாம் பரிசையும் ஆங்கில பேச்சுப் போட்டியில் ஆதர்ஷினி சிவனேசன் மூன்றாம் பரிசையும் வென்றனர்.

• 2021 ஆம் ஆண்டு தேசிய நிலையிலான இயங்கலை வாயிலாக கதை சொல்லும் போட்டியில் எஸ். லோஷினி மூன்றாம் பரிசைப் பெற்றார்.

• பாலர் பள்ளி மாணவர்களுக்கான கதை சொல்லும் போட்டியில் வைஷ்ணவி மோகன் முதல் இடத்தையும் தனுஸ்ரீ பிரிவின் குமார் நான்காம் இடத்தையும் பெற்றனர்.

• குழல் வலையொலி ஏற்பாட்டில் நடைபெற்ற கலைத்தமிழ் விழா 2020 தமிழ்ப்பள்ளிக்கான பாடல் பிரிவு போட்டியில் லினேயா தினகரன் பரிசு வென்றார்.

## தடுப்பூசி சான்றிதழ் பெற மருத்துவர்களுக்கு லஞ்சமா?

# எம்.ஏ.சி.சி. விசாரணை




புத்ரா ஜெயா – கோவிட்-19 தடுப்பூசியைப் பெறாமல் தடுப்பூசி சான்றிதழைப் பெறுவதற்கு மருத்துவர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்படுவதாக வெளிவந்த புகாரை மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் (எம்.ஏ.சி.சி.) கடுமையாக கருதுகிறது.

இவ்விவகாரம் தொடர்பில் தமது தரப்பு விசாரணை மேற்கொண்டு வருவதாக எம்.ஏ.சி.சி. தலைமை ஆணையர் டத்தோஸ்ரீ அஸாம் பாக்கி அறிக்கை ஒன்றில் கூறினார்.

இப்புகார் உண்மையாக இருக்கும் பட்சத்தில் மருத்துவ துறைக்கு இது பெரும் இழுக்கை ஏற்படுத்தும் என்பதோடு சம்பந்தப்பட்ட மருத்துவர்களின் நற்பெயருக்கும் களங்கத்தை உண்டாக்கும் என்று அவர் சொன்னார்.

தடுப்பூசி சான்றிதழ் பெற மருத்துவர்களுக்கு லஞ்சம் வழங்கப்பட்டது தொடர்பில் எங்களுக்கு இதுவரை எந்தப் புகாரும் கிடைக்கவில்லை. இத்தகைய முறைகேடுகள் நிகழ்வதாக சந்தேகிக்கப்படும் இடங்களில் கண்காணிப்பு மற்றும் விசாரணையை மேற்கொண்டு வருவோம் என்றார் அவர்.

தடுப்பூசிக்கான இலக்கவியல் சான்றிதழைப் பெற தங்கள் உறுப்பினர்களுக்கு 1,000 வெள்ளி வரை லஞ்சம் தர சில தரப்பினர் முன்வந்துள்ளதாக மலேசிய தனியார் துறை மருத்துவர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் ஸ்டீவன் சோ கூறியிருந்தார்.

அனைவரும் இத்தகைய முறைகேடுகளில் ஈடுபடவில்லை. தடுப்பூசிக்கு எதிரான மனப்போக்கை கொண்டவர்களும் உடனடியாக வெளியூர் பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளவர்களும் தான் இத்தகையச் செயல்களின் ஈடுபடுகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, இந்த லஞ்சப் புகார் தொடர்பில் அமலாக்கத் தரப்பினர் விரைந்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று மலேசிய மருத்துவர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் டத்தோ டாக்டர் எம்.சுப்பிரமணியம் வலியுறுத்தினார்.

## தூய்மை & பசுமை

# திட்டத்தின் கீழ் 500 மரங்கள் நடும் இயக்கம்

## செந்தோசா தொகுதி தொடக்கியது



கிள்ளான் – தூய்மை, பசுமை திட்டத்தின் கீழ் 500 மரங்களை நடும் இயக்கத்தை செந்தோசா சட்டமன்ற தொகுதி நேற்று தொடக்கியது.

செந்தோசா தொகுதியை தூய்மையும் பசுமையும் நிறைந்த இடமாக உருவாக்கும் நோக்கிலான இத்திட்டம் செப்டம்பர் மாதம் முழுவதும் மேற்கொள்ளப்படும் என்று செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார்.

இத்திட்டத்தின் தொடக்கமாக ஜாலான் ராஜா நோங் சாலையில் 100 மரக்கன்றுகளை நடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் சொன்னார்.

இந்த மரக்கன்றுகளை நன்கொடையாக வழங்கி உதவிய அறிவா ஜெனரல் செர்விசஸ் நிறுவனத்தின் டத்தோ அறிவா, ஏசஸ் மெயில், சோக்கா காக்காய் மலேசியா ஆகிய தரப்பினருக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

இது தவிர, பல்வேறு அரசு சாரா அமைப்புகள், வழிபாட்டுத் தலங்கள், நிறுவனங்கள், தொண்டூழிய அமைப்புகளும் இத்திட்டத்தின் வெற்றிக்கு உதவ முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஒவ்வொரு ஊராட்சி மன்றப் பகுதியிலும் ஒரு

## மின்சுடலை தேவை- டாக்டர் குணராஜ் வலியுறுத்து




கிள்ளான் – ஒவ்வொரு ஊராட்சி மன்றப் பகுதியிலும் ஒரு மின்சுடலை அமைக்கப்பட வேண்டும் என்று செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விவகாரத்தை தாம் வரும் மாநில சட்டமன்றக் கூட்டத் தொடரில் முன்வைக்கவுள்ளதாகவும் அவர் சொன்னார். கடந்த இரு மாதங்களாக கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக உயிரிழக்கும் முஸ்லீம் அல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இறந்தோர் உடல்களை உடனடியாக தகனம் செய்ய முடியாத சூழலை மின்சுடலைகள் எதிர்நோக்கி வருவதாக அவர் கூறினார்.

இதன் அடிப்படையில் இந்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த விவகாரம் மீதான தீர்மானம் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டியது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். மின்சுடலைகள் பற்றாக்குறை காரணமாக கோவிட்-19 நோய்த் தொற்றால் இறந்தோரின் நல்லுடல்களை உடனடியாக தகனம் செய்ய முடியாத சூழல் ஏற்படுகிறது. சில சமயங்களில் ஐந்து தினங்கள் வரை தகன நடவடிக்கைகாக காத்திருக்க வேண்டியுள்ளது. மேலும் திறந்த வெளியில் தகனம் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. ஆகவே, ஒவ்வொரு ஊராட்சி மன்றப் பகுதியிலும் குறைந்தது ஒரு மின்சுடலை இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டிய காலம் வந்து விட்டது என்றார் அவர்.

செந்தோசா தொகுதி சேவையை மையத்தில் நடைபெற்ற உணவுக் கூடை வழங்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது சிலாங்கூர் மாநிலத்தில் ஐந்து ஊராட்சி மன்றங்களில் மட்டுமே மின்சுடலைகள் உள்ளன. ஷா ஆலம் மாநகர் மன்றம், பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றம், சுபாங் ஜெயா மாநகர் மன்றம், கிள்ளான் நகராண்மைக் கழகம், சிப்பாங் நகராண்மைக் கழகம் ஆகியவையே அந்த ஐந்து ஊராட்சி மன்றங்களாகும். பொதுமக்களின் குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் பி40 பிரிவினரின் சுமையைக் குறைப்பதற்கு ஏதுவாக மின்சுடலைகளில் தகன நடவடிக்கைகளை இலவசமாக மேற்கொள்வதற்கு அனுமதிக்கும்படி சம்பந்தப்பட்டத் தரப்பினரை குணராஜ் கேட்டுக் கொண்டார்.

கோவிட்-19 நோய்த் தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வது தொடர்பில் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஐந்து குடும்பங்கள் உதவி கோரி எங்களை அணுகுகின்றனர். இந்தியர்களைப் பொறுத்த வரை ஒவ்வொரு தகனத்திற்கும் குறைந்த பட்சம் இரண்டாயிரம் வெள்ளி தேவைப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஊராட்சி மன்றங்கள் உதவி புரிய வேண்டும் என்றார் அவர்.

# கோல சிலாங்கூர் நகராண்மைக் கழக கடைகளுக்கு 40 விழுக்காட்டு வாடகைக் கழிவு

MPKS
MAJLIS PERBANDARAN KUALA SELANGOR

ஷா ஆலம் – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பாதிக்கப்பட்ட வணிகர்களுக்கு உதவும் வகையில் பல்வேறு திட்டங்களை கோல சிலாங்கூர் நகராண்மைக் கழகம் அமல் படுத்தியுள்ளது. நகராண்மைக் கழகத்திற்கு சொந்தமான கடைகளில் வியாபாரம் செய்வோருக்கு 40 விழுக்காட்டு வாடகைக் கழிவு வழங்குவதும் அதில் அடங்கும். எனினும், வாடகை பாக்கி வைத்திராதவர்களுக்கு மட்டுமே இந்த சலுகை வழங்கப்படும்.

இதுதவிர, பாசார் பாகி மற்றும் பாசார் மாலாம் வியாபார இடங்களுக்கான வாடகையும் 25 விழுக்காடு குறைக்கப்படுகிறது. இந்த சலுகைகள் இவ்வாண்டு இறுதி வரை அமலில் இருக்கும்.

மேலும் பட்டறை, வாகன உபரிபாக விற்பனை மற்றும் கார் கழுவும் மையங்களை நடத்துவோருக்கு கார் நிறுத்துமிடக் கட்டணத்தை இரு தவணைகளாக வழங்கவும் அனுமதிக்கப்படுகிறது என்று கோல சிலாங்கூர் நகராண்மைக் கழகத் தலைவர் ரஹிலா ரஹ்மாட் கூறினார். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காலத்தில் செயல்படுவதற்கு அனுமதிக்கப்படாத வணிக மையங்களுக்கு வாடகை விலக்களிப்பு வழங்கப்படுவதோடு உணவு வியாபாரம் மற்றும் உணவுத் தயாரிப்பு துறையில் உள்ளவர்களுக்கு 30% வாடகைக் கழிவு தரப்படுகிறது என்று அவர் தெரிவித்தார். வாடகையை தாமதமாக செலுத்துவோருக்கு அபராதத் தொகையை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பாசார் மெஸ்ரா திட்டத்தின் கீழ் மலிவு விலையில் சமையல் பொருள்கள் விற்பனை

ஷா ஆலம் – பாசார் மெஸ்ரா திட்டத்தின் கீழ் மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்போர் குறைந்த விலையில் சமையல் பொருள்களை வாங்குவதற்கான வாய்ப்பினை பெற முடியும். வெறும் இருபது வெள்ளி விலையில் இரு கோழிகள், முட்டை, காய்கறிகள் மற்றும் பழ வகைகளை வாங்குவதற்கு இந்த பாசார் மெஸ்ரா திட்டம் வகை புரிவதாக நகர்புற நல்வாழ்வுத்துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

இந்த பாசார் மெஸ்ரா திட்டத்தின் கீழ் விற்கப்படும் சமையல் பொருள்கள் சந்தையில் விற்கப் படுவதைக் காட்டிலும் மூன்று மடங்கு விலை குறைவானதாகும் என்று அவர் சொன்னார். மக்களுக்கு உதவி வழங்குவதில் மக்கள் பிரதிநிதிகள் புதிய அணுகுமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்ற மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் வேண்டுகோளுக்கிணங்க இத்திட்டம் அமல்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார். கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்பாளர்களின் பொருளாதார சுமையைக் குறைப்பதில் இத்திட்டம் ஓரளவு துணை புரியும் என்றும் அவர் சொன்னார்.

உணவுக் கூடைகளை வழங்கும் வழக்கமான நடைமுறைக்கு மாற்றாக இந்த புதிய திட்டத்தை அமல்படுத்தியுள்ளோம். இத்திட்டத்தின் வழி 20 வெள்ளி செலவில் அவர்கள் 60 வெள்ளி பெறுமானமுள்ள பொருள்களைப் பெற முடியும் என்றார் அவர்.



இங்குள்ள ஹைக்கோம் பி.பி.ஆர். குடியிருப்பு பகுதியில் இந்த பாசார் மெஸ்ரா திட்டத்தை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த பாசார் மெஸ்ரா திட்டத்தில் 200 பேர் மட்டுமே பங்கேற்க முடியும் எனக் கூறிய அவர், மாநிலத்திலுள்ள இதர எட்டு இடங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது என்றார்.

# ரிப்போர்மாசி இயக்கம் மக்களை ஒன்றிணைத்தது



ஷா ஆலம் – இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட ரிப்போர்மாசி போராட்டம் நாட்டின் நலனுக்காக அனைத்து நிலையிலான மக்களையும் ஒன்றிணைப்பதில் வெற்றி கண்டுள்ளதாக சிலாங்கூர் மாநில கெஅடிலான் கட்சியின் தலைமைத்துவ மன்றத்தின் தலைவர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். நீதி மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நாட்டின் உருவாக்கத்திற்கு அந்த போராட்டம் பெரிதும் துணை புரிந்ததாக அவர் சொன்னார். இந்த ரிப்போர்மாசி போராட்டத்திற்கு இறைவன் அருள் என்றென்றும் கிடைக்கட்டும் என்று தனது முகநூல் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார். அம்னோ துணைத் தலைவர் பதவியிலிருந்தும் துணைப் பிரதமர் பதவியிலிருந்தும் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் 2 ஆம் தேதி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ரிப்போர்மாசி என்ற சீர்திருத்த அலை உருவானது. இதன் எதிரொலியாக கெஅடிலான் எனப்படும் பார்ட்டி கெஅடிலான் ராக்யாட் கட்சி தோற்றுவிக்கப்பட்டது.

# "சேஹாட்" திட்டம் அறிமுகம்



ஷா ஆலம் – நாட்டில் கோவிட்-19 நோய்த் தொற்று பரவத் தொடங்கியது முதல் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்து வரும் மன நலம் சார்ந்த பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் "சேஹாட்" எனப்படும் சிலாங்கூர் மன ஆரோக்கிய திட்டத்தை மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. செலங்கா செயலி வாயிலாக ஒருங்கிணைக்கப்படும் இத்திட்டத்தின் வாயிலாக பொதுமக்கள் மன நலம் சார்ந்த தொடக்க அறிகுறிகளை சுயமாக பரிசோதனை செய்து கொள்வதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இந்த தொடக்கக் கட்ட பரிசோதனையின் முடிவுகளின் அடிப்படையில் சேஹாட் திட்டத்தின் கீழ் பல்வேறு அடுத்தக் கட்ட சிகிச்சைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இதன் மூலம் மன நலம் சம்பந்தப்பட்ட விழிப்புணர்வையும் மன நல பாதுகாப்பின் அவசியத்தையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துரைக்க இயலும் என்றார் அவர். இத்திட்டத்தின் கீழ் மனநலக் கல்வி தொடர்பான 30 காணொளிகளை காண்பதற்குரிய வாய்ப்பு பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்படும் எனக் கூறிய அவர், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் பொருட்டு சைகை மொழி பெயர்ப்பும் இதில் இடம் பெறும் என்றார். மன நலப் பாதிப்பை எதிர்நோக்கியவர்களுக்கு சமூக ஆதரவை வழங்கும் வகையில் சேஹாட் ஆய்வரங்கு நடத்தப்படும். இந்த ஆய்வரங்கின் வாயிலாக நிகழ்வின் வழி நடத்துநர் மற்றும் மன நலப் பிரச்னையால் பாதிக்கப்பட்ட மற்றவர்களுடன் இயங்கலை மூலம் உரையாடும் வாய்ப்பையும் சம்பந்தப்பட்டவர்கள் பெற முடியும் என அவர் தெரிவித்தார்.

சேஹாட் திட்டத்தை அமல்படுத்துவதற்காக மாநில அரசு ஐந்து லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளதாக சுகாதார துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி கூறியிருந்தார்.

# வியக்கத்தக்க வெற்றியுடன் தோக்கியோ பாராஒலிம்பிக் போட்டியை நிறைவு செய்தது மலேசியா

தோக்கியோ – ஜப்பானில் 12 நாட்கள் நடைபெற்று இம்மாதம் 5 ஆம் தேதியுடன் முடிவுக்கு வந்த தோக்கியோ பாராஒலிம்பிக் போட்டியில் (மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டி) மலேசிய வியக்கத்தக்க வெற்றியை மலேசியா பதிவு செய்துள்ளது.

இந்த போட்டியில் கலந்து கொண்டவர்கள் மாற்றுத் திறனாளிகளாக இருந்தாலும் தாங்கள் நிகழ்த்திய சாதனைகளின் வாயிலாக அவர்கள் தனித்துவமிக்கவர்கள் ஆனார்கள்.

இப்போட்டியில் மலேசியா மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற வேண்டும் என்ற இலக்கை மட்டும் அடையவில்லை. மாறாக அதையும் தாண்டி இரு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று நாட்டின் விளையாட்டுத் துறை வரலாற்றில் புதிய சகாப்த த்தைபடைத்துள்ளது.




1972 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் ஹெல்ட்பெர்க் நகரில் நடைபெற்ற பாராஒலிம்பிக் போட்டிக்கு பிறகு மலேசியா சிறப்பான அடைவு நிலையை பதிவு செய்த போட்டியாக இந்த தோக்கியோ பாராஒலிம்பிக் போட்டி விளங்குகிறது.

கடந்த 2016ஆம் ஆண்டில் நடைபெற்ற ரியோ பாராஒலிம்பிக் போட்டியில்கூட மலேசிய மூன்று தங்கப்பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் மட்டுமே பெற்றது.

இப்போட்டியில் கடைசி நாட்டின் கடைசி விளையாட்டாளராக களம் இறங்கிய தேசிய விளையாட்டாளர் அப்துல் லத்திப் ரோம்லி, நீளம் தாண்டும் போட்டியில் தங்கம் வென்று அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

# மருத்துவ சாதன தயாரிப்புத துறையில் 2.6 கோடி வெள்ளி முதலீட்டை சிலாங்கூர் பெற்றது



ஷா ஆலம் – மருத்துவ சாதனத் தயாரிப்புத் துறையில் 2 கோடியே 63 லட்சத்து 70 ஆயிரம் வெள்ளி மதிப்புள்ள முதலீட்டை சிலாங்கூர் பெற்றுள்ளது.

கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலக்கட்டத்தில் தயாரிப்புத் துறை சார்ந்த இரு தொழிலியல் திட்டங்களின் வாயிலாக இந்த முதலீடு பெறப்பட்டதாக முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழிலியல் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

மாநிலத்தில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிரூட்டுவதற்காக அடையாளம் காணப்பட்ட அடிப்படை தொழில் துறைகளில் இதுவும் ஒன்றாகும் என்று அவர் சொன்னார்.

இவ்வாண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலக்கட்டத்தில் 2 கோடியே 63 லட்சத்து 79 ஆயிரம் வெள்ளி மதிப்பிலான அறிவியல் மற்றும் அளவைக் கருவிகள் தயாரிக்கும் இரு திட்டங்களுக்கு மாநில அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அதில் 1 கோடியே 40 லட்சத்து 69 ஆயிரம் வெள்ளி மதிப்பிலான முதலீடு உள்நாட்டிலிருந்தும் 1 கோடியே 23 லட்சத்து 10 வெள்ளி மதிப்பிலான முதலீடு வெளிநாட்டிலிருந்தும் பெறப்பட்டவை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாநில சட்டமன்றத்தில் நேற்று மருத்துவ உபகரணத் தயாரிப்புத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு மாநில அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பந்திங் உறுப்பினர் லாவ் வேங் சான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் டத்தோ தெங் இவ்வாறு சொன்னார்.

# மந்திரி புசார் அமிருடின் ஷாரியின் சிறப்பு அதிகாரியாக குணராஜ் நியமனம்

ஷா ஆலம் – சிலாங்கூர் மந்திரி டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் சிறப்பு அதிகாரியாக செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான பதவி நியமனக் கடிதத்தை அவர் மந்திரி புசாரிடமிருந்து இன்று பெற்றுக் கொண்டார். இந்திய சமூகம் உள்பட மாநில மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை மந்திரி கவனத்திற்கு நேரடியாக கொண்டுச் சென்று உரிய தீர்வு காண்பதற்குரிய வாய்ப்பினை டாக்டர் குணராஜ் இந்த நியமனத்தின் வழி பெற்றுள்ளார்.

கெஅடிலான் கட்சியின் தொடக்க கால உறுப்பினரான இவர் கெஅடிலான் கட்சியின் கோத்தா ராஜா தொகுதி தலைவராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் தொகுதி கெஅடிலான் தலைவர் என்ற முறையிலும் மக்களுக்கு ஆற்றி வரும் சேவைக்கு அங்கீகாரமாக இந்த பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.



**Diterbit oleh Media Selangor Sdn Bhd** Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412